ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்று — ஆண்டாள்

தொகுதி ௫௧	கர ௵ மார்கழி ௴	பகுதி ௧௨

பிரார்த்தனை

தேவி பஞ்சகம்

(நாவலர்)

மதிகொண்ட வேணிமதன் மகிழ்கொண்ட பேரழகி
சுதிகொண்ட விந்துமணித் துயசிறப் பரஞ்சோதி
விதிகொண்ட மணிவீணை விளையாடு காமுதல்வி
பதிகொண்ட நின்கமல பாதமலர் பரவுதுமே

(மதி-சந்திரன்; வேணி-சடையை உடையவள்; சுதி—புகழ் (வேதம்); இந்துமணி—சந்திரகாந்தம்; பரவுதும்—துதிப்போம். பராசத்தியைக் கலைக்கு இறைவியாக்கிக் கூறியது.)

தாமரைசெம் பசுந்தும்பை வில்வம்புன் னாகம்
சந்தான பரிசந்த னங்கமழ்மைக் குழலீ
வாமமுறு கத்தூரி வடிவாய திலகம்
வளருமிரு நான்குகலை மதிபொருவு நுதலீ
காமனுறை வீடாகி மிளிருமுழு மதியின்
கனவடிவு கவின்சொரியுங் களங்கமறுமுகத்தீ
நாமமுறு பரமசுக ஞானமனை முன்னர்
நாலவிடு தோரணத்தை நிகர்புருவத் தழகீ (1)

(புன்னாகம்—புன்னை; வாமம்—அழகு).

(தொடர்ச்சியை அடுத்தபக்கம் காண்க)

பொற்புருவப் புனற்றடத்திற் றவழ்கயலின் கண்ணீ
பூங்குமிழின் மலரனைய நாசியலங் காரீ
விற்பவளக் காந்திதெறு மெழிலமுத விதழீ
வெண்ணிலவின் முத்தவணி வென்ற நகை காரீ
பற்பமணி பரந்துமிளிர் கின்றதொரு பரிசாய்ப்
பயின்மதன னாடியென வொளிர்கவுளின் கவுரீ
சிற்பரமா மோங்காரம் பேரின்ப வமுதிற்
றிளைக்கின்ற மணிக்காதின் மாணிக்க வல்லீ (2)

(பற்பமணி—பன்மராகமணி ; ஆடி—கண்ணாடி)

உலகொளிரச் செய்கின்ற தாடங்க வழகீ
உடுவொளியை யிருள்செய்யு நாசிமணி யழகீ
இலகழகுக் காதார மாயதிருக் கண்டீ
இமையவரைப் புரந்த விடத்திருநீல கண்டீ
அலகின் மணக் கர்ப்பூர கத்தூரிச் சாந்தால்
அவிர்ந்துலக மளிக்கின்ற வருளணிவேய்த் தோளி
பலமறைகள் பரவுகர சந்தான வல்லீ
பரஞ்சோதி மின்னருட்கார் நிகரங்கை பரசீ (3)

(தாடங்கம்-பெண்கள் காதில் அணியும் தோடு ; உடு-நட்சத்திரம் ; கண்டீ—கழுத்தையுடையவளே ; அவிர்ந்து—விளங்கி ; வேய்—மூங்கில்.)

ஞானமொடு சத்திமணங் கமழ்ந்துலகு காக்கும்
நானமுறு நல்லமுது விளைகின்ற தனத்தீ
தானமுறு முயிரனைத்துந் தவழ்ந்துவிளை யாடித்
தாமடங்கு மெழிலாலினிலையகட்டி னழகீ
ஈனமறு மிருகமல முகையிலகு முரோம
விரேகையெனும் வல்லிவள ருந்திமடு வழகீ
கானவொலி தழைகாஞ்சி தனிற்றலைத்து நிதம்பக்
கனமலையொ ராதார மாயவிடை யழகீ (4)

(அகடு-வயிறு ; முகை-அரும்பு ; உந்தி—கொப்பூழ் ; காஞ்சி—மேகலை ; தளைத்து-இறுகக்கட்டி ; இடை-இடுப்பு.)

வழிந்தொழுகு வானமுத கண்டமெனுங் குறங்கின்
வண்கவினை யேந்துகல மெனுஞ்சானு வழகீ
பழிந்தமது மலர் பிறங்குந் தூணீர மென்னும்
பண்புதரு முழங்காலி னழகுசொரி தேவி
அழிந்துலகு மறைகின்ற காலையது தோன்ற
அளித்துயிர்க ளனைத்துக்குங் கதியளிக்கும் பாதம்
இழிந்தவர்க ளெய்தரிய கமலமலர் போலும்
என்றாலும் மெனக்கருள வேண்டுமுமை யவளே (5)

(குறங்கு-தொடை ; கவின்—அழகு ; சானு—முட்டு ; தூணீரம்-அம்புக்கூடு.)

உயர்ந்தோர் கூறும் உறுதி மொழிகள்

குருபக்தி

குருபக்தியின் இயல்புகளைப் பற்றி இனி நான் உங்கட்குக் கூறுகிறேன். இதுவே எல்லா நற்பேறுக்கும் மூலமாவது; எவ்வாறெனில், துயரப்பாரத்தை அளவிற்கு மிஞ்சிச் சுமப்பவனுக்கு இது பிரம்ம ஞானத்தையடையும் திறமையை அளிக்கின்றது. கங்கை தனது தண்ணீரையெல்லாம் கடலிற் கொண்டு சேர்ப்பது போலவும், வேதங்கள் பிரம்மஞானமடைவதைப்பற்றி உபதேசிக்க முயல்வது போலவும், கற்புடைய நங்கை தனது கணவனுக்குத் தனது உடலையும் உயிரையும் சமர்ப்பிப்பது போலவும், புத்திமான் தனக்குரிமையான பொருள்கள் அனைத்தையும் தனது குருவிடம் சமர்ப்பிப்பான். அவன் தனது உடலைக் குருபக்திக்கு உறைவிடமாக ஆக்குகிறான். ஒரு மங்கை வெளியே சென்றிருக்கும் தனது காதலனை நினைத்துக்கொண்டிருப்பது போல, குருவின் உறைவிடத்தை நோக்கியே அவனது மனம் எப்போதும் திரும்பிக் கொண்டிருக்கும். அத்திசையினின்றும் வரும் காற்றையும் நோக்கிச் சென்று அவன் வணங்குவான். அத்திசையிலுள்ள ஒவ்வொன்றையும் பற்றிப் பேச முயல்கிறான். அவன் தனது உயிரையே குருவினது இல்லத்தில் நிலைநாட்டுகிறான். குருவின் ஆணைக்கு இணங்கியே அவன் தனது உடலைத் தனது சொந்த இடத்தில் தொடர்ந்து பன்னுள் வைத்திருக்கிறான். கயிற்றால் கட்டப்பட்டுள்ள கன்றுக்குட்டி தாய்ப்பசுவையே தொடர்ந்து நினைத்துக்கொண்டிருப்பது போல, அவனது உயிரும் குருவின் உறைவிடத்தில் வாயிற்படியில் மனமுவந்த அடிமையாயிருக்கின்றது. கட்டுக்களினின்றும் விடுபட்டுத் தனது குருவினைச் சந்திக்கும் பேறு என்று வாய்க்குமோ என்று தனக்குள் சொல்லிக் கொண்டேயிருப்பான். ஒவ்வொரு கணமும் ஒரு யுகம்போல அவனுக்குத் தோன்றும். குருவின் ஊரிலிருந்து யாரேனும் வரினும், குருவால் அனுப்பப்பட்டவர் யாரேனும் வரினும், வாடிநிற்கும் செடியின் மீது நீரைத் தெளித்தது போலாகும்; மேலும் மேலும் வறண்டுவரும் ஒரு சிறு குட்டையினின்றும் வெளியேற்றிக் கடலில் திரியவிடப்படும் ஒரு மீனைப் போல அவன் மகிழ்வான். வறிஞன் ஒருவனுக்குப் பெருநிதி கிடைத்தது போலும், குருடன் கண் பெற்றது போலும், இரவலனுக்கு இந்திரலோகம் அளிக்கப்பட்டது போலும் அது அவனுக்கு ஆகும். தனது இல்லத்தில் குருவின் பெயரைக் கூறுதல் அவனது நெஞ்சை உயர்த்தும்; அதனால் விளையும் ஆனந்தத்தால் அவன் தன்னைச் சூழும் எதனையும் தழுவுவான். குருவினிடத்தும் குருவின் இல்லத்தினிடத்தும் அத்தகைய பக்தி அவனிடத்தேனும் காணப்படின், தியானம் அவனிடம் உண்டானதாக அறியப்படவேண்டும். அன்பு பொங்கி வழிய அவன் தனது உள்ளத்தில் குருவின் வடிவைத் தியானத்தால் காண்பான். தனது தூய்தாக்கப்பட்ட நெஞ்சாகிய ஆசனத்தில் அவன் தனது குருவின் திருவடியை எழுந்தருளப்பண்ணுவான்; அவனிடத்துள்ள யாவும் அத்தெய்வத்தை வழிபட உதவும் பொருள்களாகின்றன. சூரியோதயத்தில் ஒருவன் கைகூப்பிச் சூரியனை வழிபடுவது போன்று, ஞான விழிப்புற்ற மனிதன் தனது குருவிற்குப் புத்தியால் பணிவைச் செலுத்துவான். ஒரு யாகத்தில் ஒரு நாளைக்கு மும்முறை தூபம் போடுவது போலும், ஆரத்தி செய்வது போலும், அவன் தன் நெஞ்சில் தூய்மையுடையோனாய், எல்லா விலங்கியல் உணர்ச்சிகளையும் யாக அக்கினியில் எரித்து, ஞான விளக்கால் குருவை வழிபடுகிறான். தனது உணர்ச்சிகளை ஒத்திசைக்கும் ஒருமை வடிவமான நைவேத்தியத்தையே குருவிற்கு சமர்ப்பிக்கிறான். குருவின் கோயிலில் தன்னையே அர்ச்சகராக நியமித்துக்கொள்கிறான். குருவின் தூய சம்பாஷணையைப்பற்றிய இனிய நினைவுகளை ஓயாது தனது புத்தியிற் பதிய வைக்கிறான். அவனது நெஞ்சு குருவின் மீதுள்ள அன்பிற்கு வசப்படும்போதெல்லாம் அவன் உத்தம ஆனந்தத்தையே அனுபவிக்கிறான். புத்திமான் தன் மனோபாவங்களுக்குத் தக்கவாறு பற்பல வடிவங்களில் தனது குருவைக் கருதுகிறான். குருவை விஷ்ணுபகவானாகக் கருதித் தன்னை ஆதிசேஷனாகவும், இலக்ஷ்மிதேவியாகவும், பிரம்மதேவராகவும் கருதுவான். அவன் குருவைத் தாயாகவும், தன்னை அன்னையின் பாலைக் குடிக்கும் மதலையாகவும் பாவித்துக் கொள்வான். குருவைப் பசுவாகவும், தன்னைக் கன்றாகவும் கருதுவான். குருவின் தயவென்னும் நீரிலே நீந்தித் திரியும் மீனாகத் தன்னைக் கருதுவான்; அன்றேல் கண்ணோ சிறகுகளோ இல்லாத சிறு குஞ்சு தன்னைக் காக்கத் தாயையே நோக்குவது போலத் தானும் அவருடைய குஞ்சு எனக் கருதுவான். உலகமாகிய கொந்தளிக்கும் கடலிடையே உதவும் தோணிபோலக் குருவைக் கருதுவான்.

குருவின்மீது அவனுக்கு உள்ள பக்தியை ஆழங்காண முடியாது. இதுவரை கூறியது அவனுக்குத் தன் மனத்தே குருவினிடம் கொள்ளும் பாவனையாகும்.

புத்திமான் தனது குருவினிடம் வெளியுலகில் எவ்வாறு நடந்து கொள்வான் என்பது பின்கூறப்படுகின்றது. தன்னால் இயன்றவரை குருவிற்குப் பணிசெய்ய வேண்டும் எனத் தீர்மானித்துக் கொள்கிறான்; குரு தனது பக்தியைக் கண்டு மகிழும்போது, அவன் அவரிடம், 'குருவே, நான் ஒருவனாகவே தங்கட்குரிய எல்லாப் பணிகளையும் செய்யட்டும்; நானே உமது முழுப் பரிவாரமும் ஆகட்டும். நீர் உபயோகப்படுத்தும் ஒவ்வொன்றும் என் வடிவமாக அமையட்டும்' என்பான். குரு இவ்வாறு மகிழும்போது, அவன் 'நான் அவரது பரிவாரமாவேன், எனது குருவிற்கு சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு பொருளாகவும் நான் ஆவேன். குரு அனைவர்க்கும் பொதுவான தாயே எனினும் நான் அவரது ஒரே மகனாக ஆவேன். அவரது அன்பைப் பலரிடத்துச் சிதற யான் இடங் கொடேன். அது ஒருமுகமாக என்மீது பாயும்படியே செய்வேன். குருவின் தயவு என் உடலிலேயே அடைப்பட்டுக் கிடக்கும்; எத்திசையிலும் அதைவிட்டு வெளியேற அதற்கு இயலாது. குருவின் திருமேனியை அலங்கரித்தற்காக யான் எனது பல்வகைக் குணங்களையும் அணிகலங்களாக்குவேன். இம்மாதிரியான கருத்துகளைக் கொண்டு யான் எனது குருதேவரின் கோயிலில் பணிவிடை செய்வேன். நானே அதன் வாயிற்படியாகக் கிடக்க, அவர் வரும்போதும் புகும்போதும் என்னைத் தாண்டிச் செல்லுவதை விரும்புவேன். நானே கோயிற் கதவாகவும், கோயிற் சேவகனாகவும் ஆவேன். நானே மாவடியாவேன், யானே அதனைக் குருவினது திருவடியில் அணிவேன். யானே குடையாவேன், அதைக் குருவின் தலைமீது பிடித்துச் செல்வேன். யானே எனது குருவிற்கு வழி காட்டும் விளக்காவேன். யானே பூச்சிகளை ஓட்டி அவரைப் பாதுகாப்பேன், கஷ்டமான பாதைகளில் எனது கையை அவர்க்குக் கொடுத்து உதவுவேன். எல்லாப் பணிகளையும் யான் இயற்றுவேன், அவர்க்கு வேண்டிய அனைத்தையும் கொணர்ந்து அளிப்பேன். அவர்க்கு உதவும் பொருள்கள் பலவற்றையும் யானே சுமந்து செல்வேன், அவற்றை அவர் திருமுன்பே வைப்பேன், அவரது ஏவலைப் பெறக் கைகாட்டிக் காத்திருப்பேன். யான் வாசனைத் திரவியங்களை அவர்க்காகத் தயாரிப்பேன், அவரது நீராட்டத்திற்கு வேண்டிய அனைத்தையும் இயற்றுவேன், குரு ஆசனத்தில் அமர்தற்குத் தகுதியாகுமாறு இவையனைத்தையும் செய்வேன். உடையும் அணியும் அழகுபடுத்தும் தாள்களும் அவர்க்கு யானாவேன். யானே அவர்க்குச் சமையல் செய்து, உணவைப் பரிமாறி, கண்திருஷ்டியின் தோஷம் வாராது காக்க, அவர்க்கு என்னையே ஆலத்தியாக அவர் முன்பு சுழற்றுவேன். குரு உண்ணும்போது யான் அவருடன் உண்பேன், அவர்க்கு வெற்றிலைபாக்கும் சமர்ப்பிப்பேன். யான் உண் கலங்களைக் கழுவி, படுக்கையைத் தயாரித்து, திருவடிகளைப் பிடிப்பேன். எனது குருவின் கவனம் செல்லுமிடமெல்லாம் இருப்பேன். அவர்க்குக் காது கேட்கும் தூரம் வரை எல்லா இடத்தையும் இலக்கணக்கான மொழிகளால் நிரப்புவேன்; ஆனால் குரு இருக்கும் இடத்தெல்லாம் யான் இருப்பேன். அவர் பிரியத்தோடு நோக்கும் ஒவ்வொரு வடிவமும் நானேயாவேன். நான் அவர்க்கு நாவிற்கினிய சுவைப்பொருளாயும், மோத்தற்கினிய நறுமணமாயும் ஆவேன். இவ்வாறு குருவிற்குரிய பணி முழுவதையும், அவர்க்குப் புற உலகத் தேவைகள் சம்பந்தபட்டவரை, யானே ஏற்று மகிழ்வேன். என் உடல் உள்ளவரை இவ்வாறு என்னால் பணி ஆற்றப்படும். ஆதலால் என் உடல் விழுந்தபின்னும் அதே மனப்பான்மை என்னிடத்து மிஞ்சுதலில் வியக்கத்தக்கது யாதும் இன்று. எனது குருவின் திருவடிகள் தீண்டிய தலத்திலுள்ள தூளோடு என் உடலின் மிச்சத்தைச் சேர்ப்பேன். என் உடலிலுள் நீர் பயமான பகுதிகளை எனது குரு தொடக்கூடிய நீரோடு சேர்த்துவிடுவேன். எனது ஆன்ம ஒளியைக் குருவிற்குப் பயன்படும் ஒளிகளோடோ, அவரது உறைவிடத்தில் வெளிச்சத்தை யூட்டும் ஒளிகளோடோ மருவச் செய்வேன் எனது குருவின் உடலிற்கு எனது மூச்சே விசிறியாகும். யான் வாழினும் மாளினும் இப்பணியை யான் ஒருக்காலும் கைவிடேன்; இப்பணியில் ஒரு பகுதியையேனும் பெறப் பிறர்க்கு இடங் கொடேன்.

—தியானேச்வரி.

விவேகாநந்த வைபவம்

இராமகிருஷ்ணன் M.A., L.T.

4 - குலப்பெருமை

பாலை நிலத்தின் மணற் பரப்பினில் தாவரம் எதும் விளைவதில்லை. நீர் வளமும் நிலச் செழிப்பும் வாய்ந்த வண்டல் பிரதேசத்திலோ பயிர்கள் நன்ருகப் பயிராகின்றன. தாவர வர்க்கங்களும் ஜீவராசிகளும் தம் தம் இயல்புக்கு அனுகூலமான ஸ்தலம், சூழ்நிலை இவற்றைத் தேடிக்கொள்கின்றன. மனித உடல் எடுக்கும் ஜீவனும் தனது தன்மைக்குச் சாதகமான சூழ்நிலையை நாடி நிற்கின்றது.

உத்தமப் பண்புகள் நிறைந்துள்ள குலங்களிலேயே மகான்கள் தோன்றுகின்றனர். இரணியன் வீட்டில் பக்த சிகாமணியான பிரஹ்லாதன் பிறந்தது இந்தப் பொது விதிக்கும் விலக்குப் போன்ற ஒரு நிதரிசனமேயாகும். பிரஹ்லாதன் விஷயத்தில் கூட இரணியன் இயற்றிய கொடுமைகளும் அவன் ஏற்படுத்த முயன்ற மாருன சூழ்நிலையும் பாலபக்தனுடைய மனவுறுதியைப்பலப்படுத்தவே உதவின. காற்று பலமாக வீசினுல் சாதாரண மரங்கள் விழுந்து விடுகின்றன. வலிவுள்ள மரங்கள் உறுதி பெறுகின்றன.

பிரஹ்லாதனது போன்ற உதாரணங்கள் ஒரு புறமிருக்க, உத்தம குலத்திலேயே உத்தம சந்தானம் தோன்றுவதுதான் பொதுவான அனுபவமாக இருந்து வருகின்றது. பிரம்ம ஞானமே உருவெடுத்த சுகமகரிஷி வியாச பகவானுடைய சத்புத்திரர் ஆவார். இராமனை இரகு குல திலகமென்று போற்றுகின்ருேம். இராமனுக்கு முன் அக்குலத்தினில் பல மகான்கள் தோன்றினர். வீரத்தாலும் நேர்மையான நடத்தையாலும், தியாகத்தாலும், குலத்திற்குப் பெருமைத் தேடித்தந்த அப்பலருடைய பரம்பரையில் சிரோபூஷணம் போலத் தோன்றினர் இராமசந்திர மூர்த்தி. தசரதரும் கௌசல்யையும் பரந்தாமனைத் தமது பாலகனுகப் பெறும் பண்பைப் பூரண அளவிற்குப் பெற்றவர்கள். தசரதர் இராமரிடம் வைத்த வாஞ்சை, தந்தை தனயனுக்கிடையில் உள்ள அன்பின் மிக மிகச்சிறந்ததொரு நிலையையன்ருே காட்டுவதாயிற்று! தசரதருடைய பிராணனுகவன்ருே இராமர் விளங்கினர்! அயோத்தியை விட்டு இராமர் அகன்றதும் அவரது உடல் வீழ்ந்து விட்டதல்லவா!

மங்கையர்க்கு விளக்கென விளங்கும் சீதா பிராட்டியார் பூமாதேவியினின்றும் தோன்றியவளாயினும், அவளுக்கு வளர்ப்புத் தந்தையாக அமைந்தவர் ராஜரிஷியான ஜனகர் என்பது கவனிக்கவேண்டிய விஷயமாகும். பாரதத்தின் பண்பே உறைந்து உருவான சீதாதேவி, ஞானமும் நிஷ்காம்ய கர்மமும் திரண்டு தோன்றிய ஜனக மன்னரின் இல்லத்தில் அன்றி வேறு எங்கு இருந்திருக்கமுடியும்?

அவ்வாறே கண்ணபிரானைக் குழந்தையாகப் பெற்றெடுக்கும் பேறு வசுதேவருக்கும் தேவகிக்கும் வாய்ந்தது. பாலகிருஷ்ணனை வளர்க்கும் பாக்கியம் நந்தகோபருக்கும் யசோதைக்கும் கிடைத்தது.

ஏசுநாதரின் அன்னையான மேரி தேவியை இன்றும் நாம் புனிதத் தாயெனப் போற்றுகின்ருேம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவர் ஏழைக் குடும்பமொன்றில் ஜனித்தார். நாட்டின் அரசியல் துறையிலோ சமூக அந்தஸ்து சம்பந்தப்பட்ட வரையிலோ அந்தக் குடும்பம் பெயரும் புகழும் பெற்றிருந்ததெனக் கூறமுடியாது. இலக்கியத் துறையிலோ அல்லது பொருளாதாரத் துறையிலோ அக்குடும்பத்தினர் சிறந்து விளங்கினர் என்றும் சொல்லமுடியாது. ஆனுல் அறத்துறையில், தர்ம மார்க்கத்தில், நன்னெறியினில், இராமகிருஷ்ணருடைய பெற்ருேர்கள் தலை சிறந்து விளங்கினர். ஒரு பொய் சொல்ல இணங்காவிடில் தமது சொத்து, சுதந்திரம் யாவையும் இழந்து பரிதவிக்க வேண்டிய சங்கடமான நிலைமை ஏற்பட்டபொழுது இராமகிருஷ்ணருடைய பெற்ருேர்கள் சத்தியத்தையே கைப்பற்றி நின்று பொருளாதாரத் துறையில் பெரு நஷ்டமெய்தினர். இலௌகிகப் பற்றுள்ள மக்களின் போக்குக்கும் தர்மவான்களின் போக்குக்கும் மாறுபாடு இருக்கத்தான் செய்யும். தந்தையின் சொல்லைக் காப்பாற்றும் பொருட்டு இராமர் வனவாசம் செய்தார். சத்தியத்திற்குக் கட்டுப்பட்டுப் பாண்டவர்கள் காடுசென்றனர். மக்களின் துயரை ஆற்றும் பொருட்டுப் புதிய ஒளி பெறுவதற்காக அரசைத் துறந்தார் புத்த பகவான். ஒரு இலட்சியத்திற்காக ஹரிச்சந்திரன் சொல்லொணுத் துயரை ஏற்ருன். ஒரு பொய் சொல்ல மனமற்றவராய் இராமகிருஷ்ணருடைய தந்தையார் தம் உடைமைகள்

யாவையும் இழந்தார். ஆனால் இவ்வுலக வாழ்வினில் நஷ்டமும் தொல்லையும்" ஏற்பட்ட அளவிற்கு அவர்களுக்கு ஆத்மீயத் துறையில் பெரும் சிறப்பும் கிடைத்தன. யுகாவதார புருஷரான பரமஹம்ஸதேவர் தாமே வலியத் திருவருள் புரிந்து அந்தக் குடும்பத்தில் ஜனனமெடுப்பதற்குக் காரணமாக இருக்கும் அளவிற்குச் சீலமும் தர்மமும் சிரத்தையும் வைதிகப் பற்றும் ஈச்வர விசுவாசமும் அவருடைய தாய் தந்தையரிடம் மிளிர்ந்திருக்க வேண்டும் என்பது வெளிப்படை.

ஸ்ரீ ராமகிருஷ்ணர், வாழ்நாளிற் பின்னாள் தமது தாய் தந்தையரைப்பற்றி இவ்வாறு தமது சீடர்க்கும் அன்பர்க்கும் கூறுவதுண்டு: "எனது அன்னை நேர்மையும் சிரத்தையும் ஆக்கையோடியங்கும் உருவாவாள். அவள் உலகத்தாரது இயலும் நடையும் நன்கறியாள் படிற்றொழுக்கம் சிறிதும் பயிலாதவளாதலின் அவள் யாரிடமும் எதையும் உரைப்பாள். வஞ்சனை முழுதும் நீங்கிய நெஞ்சுடைமையின் அனைவரும் அவள்பாட்டு அன்புடையவராவார். என் தந்தை இழிகுலத்தோரிடமிருந்து ஒரு நாளும் தானம் வாங்கார். தமது காலத்தில் மிகுந்த பகுதியை வந்தனை வழிபாட்டிலும் தியானத்திலும் ஜபத்திலும் செலவிடுவார். சந்தியா வந்தன மந்திரத்தில் காயத்ரி தேவியை அவர் ஆவாஹனம் பண்ணுங்கால், ஒவ்வொரு நாளும் அவரது மார்பு வான் சோதி வீசி விம்மும்; கன்னத்தின் மீதே கண்ணீர் வழியும். ஒழிந்த வேளைகளில், பூசனை நடவாத காலத்து, ரகுவீரருக்காக மலர்மாலை தொடுக்கும் தொண்டினில் அமர்வார். பொய்ச்சான்று கூறு தொழிவான் எண்ணி முந்தையோரில்லந் துறந்து சென்றார். ஊரார் அவரை முனிவரென மதித்தார்".

இராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவருடைய திருவவதார நோக்கத்தைப் பூர்த்தி செய்விக்கும் பொருட்டு அவருடன் தோன்றி வந்த நித்ய சித்தர்களுள் முக்கியமானவர் விவேகானந்த சுவாமிகள். இவரைப் பரிபூரண நிலை எய்திய மகரிஷியென மதித்தார் திரிகால ஞானியான பரமஹம்ஸர். அவரைத் தியான சித்திபெற்ற மகாபுருஷராகவே கருதிப் போற்றினார். இராமருடைய கைங்கரியத்தில் ஈடுபட்ட இலக்ஷ்மணர், ஆஞ்சநேயர், கிருஷ்ணருடைய தோழமையைப் பெற்ற அர்ஜுனன், புத்த தேவருடைய முக்கிய சீடரான ஆனந்தர் முதலியோருடைய நிலையே வருகின்றது நமக்கு விவேகானந்த சுவாமிகளுடைய ஜீவியத்தை படிக்கும் பொழுது. மண்ணில் உழன்று மண்ணைத் தின்று மண்ணில் மடிந்தழியும் புழுக்கள் போன்று ஜீவிக்கின்றனர் மக்களிற் பலர். அப்புழுக்களிற் சில சிற்சில சமயங்களில் விண்ணை நோக்குகின்றன. விண்ணை நோக்கிப் பறந்து செல்ல அவாவுறுகின்றன. ஆனால் விவேகானந்த சுவாமிகள் போன்றவர்களோ விண்ணில் வாழும் தூய பறவைகள். கருணை காரணமாக மண்ணின் மீது வந்து கொஞ்ச காலம் தங்கி மண் வாசிகளுக்கு விண் வாசனையைப் புகட்டிச் செல்கின்றனர்.

விவேகானந்த சுவாமிகளுடைய தன்மைகளுள் மிகப்பிரதானமானது அவருடைய இராஜ காம்பீர்யம் தான் என்று ஆசிரியர் ரோமேன் ரோலண்டு என்பார் அழகாகக் கூறியுள்ளார். "விவேகானந்த சுவாமிகளிடம் தலையெடுத்து நின்ற தன்மை இராஜ காம்பீர்யமேயாகும். அவர் அரசாளப் பிறந்தவர். இந்தியாவிலோ அமெரிக்காவிலோ அவரை நெருங்கியவர் யாரும் அவருடைய இராஜ காம்பீர்யத்திற்கு அஞ்சலி செய்யத் தவறியதேயில்லை. அவருடைய வீர்யமும், சௌந்தர்யமும், அவருடைய போக்கின் லாவண்யமும் பெருந்தன்மையும், அவரது கரிய விழிகளின் பேரொளியும், அவரது கம்பீரமான தோற்றமும் அவரது ஆழம் மிகுந்த, நிறைந்த குரலின் அதிமதுர இசையும் அமெரிக்கர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன......தலைமை ஸ்தானத்தையன்றி அதற்கு அடுத்தபடியான ஸ்தானமொன்றில் விவேகானந்தர் இருக்கக்கூடும் என்று எண்ணவும் முடியாது. எங்கு சென்றாலும் அவரே அனைவரிலும் முதல்வராகத் திகழ்ந்தார். அவரைக் கண்டோரெல்லாம் அவர் ஒரு தலைவர், ஈச்வர ஆதேசம் பெற்றவர், தலைமை தாங்கி மற்றோரை இட்டுச்செல்லும் சக்தி உடையவரென்று காட்டும் திவ்விய முத்திரை பெற்ற நரோத்தமர் என்று தெரிந்து கொண்டனர். ஹிமயமலையின் மீது சஞ்சரித்த விவேகானந்த சுவாமிகளைச் சந்தித்த வழிப்போக்கர் ஒருவர்-அவரை இன்னார் என்று அறியாதவர்—அவரைக் கண்டு பிரமித்து நின்று, ஹா, பரமசிவனே! என்று வாய்விட்டுக் கூவினார். விவேகானந்தருடைய இஷ்டதெய்வமான பரமசிவன் தனது திருப்பெயரையே அவருடைய நெற்றியில் பொறித்து விட்டார் போலும்".

இத்தகைய இராஜலக்ஷணம் மிகுந்த விவேகானந்த சுவாமிகள் பிரபுத்வம் மிகுந்த தத்த

குலமொன்றில் தோன்றினார். அந்தக் குலத்தினர் லக்ஷ்மி கடாட்சம் மிகமிகப் பெற்றவர்கள். கல்கத்தா நகரில் மிகக்கியாதியுடைய வழக்கறிஞராக இருந்த ராமமோஹன் தத்தர் இக்குலத்திற்குப் பெருமை தேடித் தந்தார். பிற்காலத்தில் இக்குடும்பத்தில் தோன்றிய விவேகானந்த சுவாமிகளிடம் இயல்பாகவே பிரபுத்வமும் பெருந்தன்மையும் பெரும்போக்கும் பேச்சுவன்மையும் காம்பீர்யமும் உயர்ந்த பண்பும் அமைந்திருந்தது பிறவிக்குணம் காரணமாகவே என்று கூறுவது மிகையாகாது. ஆனால் விவேகானந்தருடைய மூதாதையருள் அவருக்கு மிகமிக நெருங்கிய தொடர்பு பெற்றவர் என்று ஒருவரைக் குறிப்பிடவேண்டுமானால் அது அவருடைய பாட்டனாராகிய துர்க்கா சரணதத்தர் என்பவர் தான். துர்க்கா சரணரும் விவேகானந்தரும் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்ளுமாறு காலத்தில் நெருங்கினவர்கள் அல்லர். ஆனால் பாட்டனருடைய பேறு பேரனுக்கு வரும் என்ற உண்மை அவர்கள் விஷயத்தில் பலிதமாயிற்று. விவேகானந்தர் ஒரு துறவித் திலகமாக விளங்கினார். அவருடைய பாட்டனாராகிய துர்க்கா சரணரும் ஒரு மகனை ஈன்றெடுத்த பின்னர் தமது இருபத்தைந்தாவது வயதினிலே உலகைத் துறந்து சன்னியாசியாகப் போய்விட்டார். சன்னியாசம் என்பது இம்முறையில் குலதர்மமாகவே விவேகானந்தருடைய இரத்தத்தில் கலந்திருந்தது எனலாம்.

விவேகானந்தருடைய தந்தையாகிய விச்வநாத தத்தர் பெரிய சீமானாகத் திகழ்ந்தார். அவர் நன்கு கற்றவர். வழக்கறிஞர் தொழிலில் நிபுணர். தயையும் ஈகைக் குணமும் கொண்டவர். பணத்தைத் தாராளமாகத் தங்கு தடையின்றிச் செலவிடும் தன்மையுடையவர். தமது மக்களை நல்ல முறையில் பயிற்றுவித்தவர். ஒரு சமயம் சிறுவன் நரேந்திரன் தன் அன்னையிடம் குறும்புத்தனமாக நடந்து கொண்டான். தந்தை நரேந்திரனை நேரடியாகக் கடிந்து கொள்ளாமல் நரேந்திரன் தன் நண்பர்களுடன் கூடிப் பொழுது போக்கும் அறையின் கதவில் "இன்று நரேன் பாபு தன் அன்னையை இவ்வாறு கூறித் திட்டினான்" என்று எழுதி வைத்து விட்டார். நரேந்திரனைக் காண வந்த நண்பர்கள் யாவரும் அதைப்படித்துப் பார்த்தனர். நரேந்திரனுக்குத் தான் செய்த பிழை நன்றாகப் புலப்பட்டு விட்டது.

விச்வநாத தத்தர் நரேந்திர நாதருக்குச் சொத்து ஒன்றும் தேடி வைக்கவில்லை. நரேந்திரர் இளைஞராக இருக்கும் பொழுதே விச்வநாத தத்தர் திடீரென்று ஒரு நாள் மரணமடைய, அவரது குடும்பம் பரிதாபகரமான முறையில் வறுமைக்கு வசமாய் விட்டது. ஆனாலும் விவேகானந்தருடைய நல்லியல்புகளுள் சில அவருடைய தந்தையிடமிருந்து அவர் பெற்ற பிதுரார்ஜிதமென்பது மிகையாகாது. ஒரு நாள் நரேந்திரன் தன் தந்தையிடம் சென்று "அப்பா நீங்கள் எனக்காக என்ன செய்து விட்டீர்கள்?" என்று கேட்டார். சிறுவனைப் பார்த்த தந்தை, சைதன்யம் நிறைந்த அவனுடைய தோற்றத்தை அள்ளிப் பருகிப் பெருமிதம் எய்தியவராய் 'நரேன்! கண்ணாடியின் முன் சென்று பார்!" என்று விடை கூறினார். பிற்காலத்தில் தனது மைந்தன் உலகம் போற்றும் வேதாந்த கேஸரியாகத் திகழ்வான் என்பதை ஒருக்கால் விச்வநாத தத்தர் சிறிதும் எதிர்பாராது இருந்திருக்கலாம். ஆனால் நரேந்திரனே தத்த குல சிரேஷ்டனாக விளங்குவான் என்பதை அவர் நிச்சயம் எதிர்பார்த்து அகமகிழ்ந்திருக்கவேண்டும். நரேந்திர மலர் விவேகானந்தக் கனியானதைப் பார்க்கக்கொடுத்து வைக்கவில்லை அவர்க்கு.

அவருடைய தர்மபத்தினியான புவனேச்வரி தேவிக்கு அந்த பாக்கியம் கிடைத்தது. விவேகானந்தரைப் பெற்றெடுத்த புவனேச்வரி நற்குணங்கள் பல நிறைந்த உத்தமி. அந்த அம்மாளிடம் ஈசுவர பக்தி நிறைந்திருந்தது. சிவபெருமானுடைய வரப்பிரசாதமாகவே அவள் நரேந்திரனைக் கருதினாள். குடும்ப நிர்வாகத் திறமையும் தயாள குணமும் அவளிடம் மிளிர்ந்தன. இராமாயண மகாபாரதக் கதைகளில் அவளுக்குப் பற்று மிகுதியாக இருந்தது. அவளது ஞாபக சக்தி அபாரமானது. விவேகானந்த சுவாமிகள் தம் ஆயுட் காலம் முழுதும் தம் தாயாரிடம் மிகுந்த பக்தி விசுவாசம் கொண்டு ஒழுகினார்.

1894-ம் ஆண்டில் விவேகானந்த சுவாமிகள் அமெரிக்க நாட்டினில் பாஸ்டன் எனும் நகரில் "இந்தியமாதரின் இலட்சியங்கள்" என்ற பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினார். அந்தப் பிரசங்கத்தினிடையில் அவர் தம் தாயாரைப் பற்றிக் குறிப்பிட்டுச் சுயநலமற்ற அன்பும் தூய்மையும் நிறைந்த அந்த அம்மணியின் வாழ்வு காரணமாகவே அவளது மைந்தரான தாம் பெரும் பணியொன்றை ஆற்ற முடிந்தது என்று பெருமையுடன் தெரிவித்துக் கொண்டார். தம்முடைய குல தர்மம் போலவே தாம் துறவை

ஏற்பது அதனால் சாத்தியமாயிற்று என்றும் கூறினார்.

அமெரிக்க நாட்டினில் விவேகானந்தர் அடிக்கடி தமது தாயைப்பற்றித் தம் நண்பர்களுக்கு எடுத்துச் சொல்லுவார். "என் தாய் அதியாச்சரியமான தன்னடக்கம் கொண்டவள். உபவாசம் இருப்பதில் அவளுக்கு இணையான ஸ்திரீயை நான் கண்டதில்லை. ஒருதடவை அவள் சேர்ந்தாற் போலப் பதினான்கு நாட்கள் உபவாசமிருந்தாள். என் தாயாரின் ஊக்கம் காரணமாகவே நான் இதையெல்லாம் செய்ய முடிந்தது. என் வாழ்வுக்கும் பணிக்கும் என் தாயின் குணவைபவம் நிரந்தரமான தொரு ஊக்கச் சக்தியாக அமைந்தது" என்று அவர் கூறுவதுண்டு.

1894-ம் ஆண்டினில் விவேகானந்தருடைய அமெரிக்க சிஷ்யைகள் சிலர் அவருக்குத் தெரியாமலேயே இந்தியாவில் இருந்த புவனேச்வரி தேவிக்குக் கடிதம் ஒன்று அனுப்பினர். அப்பொழுது கிறிஸ்துமஸ் விழா சமயம். தேவி மேரி ஏசுகிறிஸ்துவைப் பெற்றெடுத்த திருநாள் கொண்டாடப்படும் காலம். கன்னிமேரியின் மடியினில் சிசு ஏசு அமர்ந்திருப்பது போன்ற அழகிய படமொன்றுடன் அந்தக் கடிதம் அனுப்பப்பட்டது: கடிதத்தின் வாசகமாவது :—

ஸ்ரீ விவேகானந்த சுவாமிகளின் திரு அன்னையாருக்கு : அம்மையே,

இது கிறிஸ்துமஸ் விழாச் சமயம். மேரி தேவி உலகிற்கு அளித்த வரப்பிரசாதமாகிய கிறிஸ்துவைப் போற்றி நாங்கள் இன்புறும் காலம் இது. புனித நிகழ்ச்சிகளை நினைவூட்டிக் கொள்ளும் சமயமாகும் இது. எங்களிடையில் உமது மைந்தனைப் பெற்றிருக்கும் பாக்கியசாலிகளான நாங்கள் உமக்கு வாழ்த்துக்கள் அனுப்புகின்றோம். அன்றொருநாள் அவர் பாரதத்தில் தாய்மார்களின் இலட்சியம் இன்னது என்பதைப் பற்றி எங்களுக்கு உரையொன்று நிகழ்த்தினார். அப்பொழுது அவர் ஆண்களுக்கும் பெண் குழவிகளுக்கும் தாம் இங்கு செய்துள்ள மகத்தான சேவையெல்லாம் உமக்கே உரியது என்று சமர்ப்பணம் செய்துவிட்டார். அவர் உரையைக் கேட்ட அனைவருக்கும், அவர் தமது அன்னையைப் போற்றி வழிபடும் முறையானது உள்ளத்தை ஊக்கி உயர்த்த வல்லதொரு சக்திபோன்று இருக்கும்.

அம்மையே, உமது திருமகனார் மூலம் நல மாற்றிவரும் உமது வாழ்க்கைக்கும் பணிக்குமாக நாங்கள் அறிந்துணர்ந்து அளிக்கும் நன்றியை ஏற்பீர்களாக. இறைவனிடமிருந்து மனித சமூகம் பெறவேண்டிய உண்மைச் சம்பத்துக்களான சகோதரத்துவம், ஒற்றுமை ஆகியவற்றை உலகம் அடையவிருக்கின்றது என்பதை நினைவூட்டும் ஒரு பிரத்தியட்ச நிதரிசனமாகத் திகழுமாறு நாங்கள் அனுப்பும் வாழ்த்துக்களை அங்கீகரிப்பீர்களாக".

தத்த குல சிரேஷ்டா என்று விவேகானந்தரைக் கூறுவது மிகப் பொருத்தமேயாகும். ஆனால் அவருடைய குலப்பெருமை முழுவதும் அந்தக் கூற்றினுள் அடங்கி விடாது. தத்தர் குலத்திற்கு மட்டுமே சோபை தந்தவர் அல்லர் அவர். பாரதநாட்டின் துறவியர் குலம் ஒன்று உண்டே, அதற்குப் பெருமை தந்தவர் அவர். அவருடைய ஞானத் தந்தை பரமஹம்ஸதேவர். பரமஹம்ஸதேவர் தோதாபுரியின் சிஷ்யர். தோதாபுரியோ சங்கரர் ஏற்படுத்திய சன்னியாசி மரபினைச் சேர்ந்தவர். சங்கரரோ புவனம் தோன்றிய காலம் முதல் இருந்துவரும் நிவிருத்தி மார்க்க வம்சத்தில் உதித்தவர். சிகாகோ சர்வமத மகாசபையில் விவேகானந்தரது வாக்கினின்றும் வெளிவந்த வாக்கியமே அவர் எத்தகைய குலத்தைச் சார்ந்தவர் என்பதை நிரூபிக்கின்றது.

"புவனத்திலேயே மிகப்புராதனமான துறவியர் குழாத்தின் சார்பாக நான் உங்களுக்கு நன்றி கூறுகிறேன்" என்று அவர் அங்கு முழங்கினார். மேனாட்டு நிபுணர்கள் பலர் முன்பு தாம் எழுந்து நின்றபொழுது அவர் தற்போதம் இழந்து தம்மைப் பாரத சன்னியாசி சங்கத்தின் ஓர் அங்கமாகவே கருதினார்.

இல்லறத்தாருடைய தர்மத்தை யொட்டி சந்தான விருத்தி செய்தவரல்லர் விவேகானந்த சுவாமிகள். தன் சக்தியனைத்தையும் பயன்படுத்தி அருங் கனியொன்றை ஈந்து, பிறகு ஓய்ந்து போகும் மரத்தை யொப்ப, தத்த குலம் விவேகானந்தரை ஈந்து முற்றுப் பெற்றுவிட்டதெனலாம். ஆனால் சன்னியாசிகள் குலத்திற்கோ விவேகானந்தர் ஏராளமாக வம்சவிருத்தி செய்துள்ளார். அவர் காட்டிய வழியைப் பின்பற்றி நூற்றுக்கணக்கான இளைஞர்கள் இராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்து சுகபோகங்களை வெறுத்

துத் துவராடை புனைந்து, சுயநலத்தை எற்று, சன்னியாச தர்மத்தைப் போற்றிக் மறந்து தியாகம், சேவை இலட்சியங்களை காத்து வருகின்றனர்.

சிவானந்த வாணி

(ஆர். ராமகிருஷ்ணன் எம். ஏ., எல். டி.)

பேலூர் மடம், 1929 ஜூலை 26, வெள்ளி

பிற்பகல் வேளை வராகநகரிலிருந்த அனாதை ஆசிரமத்தில் பணியாற்றிவந்த துறவியொருவரைக் காண நேர்ந்த மகா புருஷ மகாராஜர் அவரை அருகில் வருமாறு அழைத்தார். அவருடன் சில வார்த்தைகள் பேசிய பின்னர் மகாபுருஷர் இவ்வாறு கூறினார்:

"இப்பொழுது நீர் புறப்பட்டுப் போவது எவ்வாறு முடியும்? ச—திரும்பிவந்து சேரட்டும். அதன் பிறகு வேண்டுமானால் நீர் செல்லுவீராக. சென்று தான் ஆகவேண்டுமென்பது ஏனோ? இங்கேயே உமது பணிகளையெல்லாம் செய்து முடித்த பிறகு, எஞ்சிய நேரத்தில் தியான ஜபம் செய்துவரலாம். இதெல்லாம் மனத்தினுடைய போக்குக்கு ஏற்ப அமையும் விஷயமேயன்றி வேறில்லை. மனம் ஈசுவரப்பற்று உடையதானால், எந்த நிலையிலும் தியானத்திற்கும் ஜபத்திற்கும் நேரம் ஏற்படுத்திக் கொண்டு விடலாம். வேண்டுவதெல்லாம் மனப்பூர்வமான ஈசுவர தாகம் தான். உம்மால் இவ்விடத்தில் சாதனை செய்ய முடியாது போனால் வேறு எவ்விடத்திலும் அது உமக்கு சாத்தியமாகாது. குருதேவர் "இங்கு அதைப் பெற்றுள்ளவன் அங்கும் அதைப் பெற்றவனாவான்" என்று கூறுவதுண்டு. இது மிக மிக உண்மையான கூற்று ஆகும். மிகுந்த தாகத்துடன் இறைவனை அழைப்பித்துப் பிரார்த்தனை செய்வீராக. இறைவன் உமக்குப் பக்தியும் விச்வாசமும் ஏராளமாகத் தருவார். நீர் ஏனோ இவ்விடத்தைவிட்டுச் செல்ல வேண்டும்? இங்கு நீர் இறைவனுடைய பணியையே ஆற்றி வருகின்றீர், இவ்வாறு செய்வது அற்ப சொற்ப விஷயமா என்ன!

துறவி: கா—நினைத்த பொழுதெல்லாம் அதையும் இதையும் சொல்லிக் கொண்டேயிருக்கின்றார்.

இவ்வாறு கூறி அவர் அழ ஆரம்பித்து விட்டார்.

மகாபுருஷர்: உங்களிருவருக்குமிடையில் ஏதோ மனஸ்தாபம் இருந்து வருகின்றது என்பதை நானும் உணர்ந்தேன். ஏனோ கா— அவ்வாறெல்லாம் பேசவேண்டும்? நீர் அத்தகைய மனிதர் அல்லீர் என்பதை நான் நன்கு அறிவேன். நீர் வீண் விவாதத்திலெல்லாம் ஈடுபட மாட்டீர். நீர் நல்ல மனிதா ஆயிற்றே, கா—வை இங்கு ஒரு தடவை வந்துவிட்டுப் போகுமாறு நீர் என் சொல்லக் கூடாது? நான் அவருக்கு விஷயங்களை விளங்கக் கூறுவேனே. நீர் எதையும் மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டாம். கூட்டி வைக்கப்பட்டுள்ள பானைகளை நகர்த்தினோமானால் ஒன்றுக்கொன்று உராய்ந்து கொள்ளுவது இயல்புதானே. இதை நீர் அறிவீர் அல்லவா? இதையெல்லாம் பிரமாதமாகக் கொள்ளலாமா? இவ்வாறு மனஸ்தாபங்கள் ஏற்படுவது உண்டுதான், பிறகு அவை சரிப்பட்டுப் போவதும் உண்டுதான். இருகை தட்டினால் தானே சத்தம் ஏற்படும்? கா— என்னவேண்டுமானாலும் கூறட்டும். நீர் எல்லாவற்றையும் சகித்துக் கொண்டிரும். அப்பொழுதுதான் மனஸ்தாபத்திற்கு இடமில்லாமல் போகும். நீரும் ஓரளவு பணிவு காட்டி நடந்து கொள்ளவேண்டும், ஓரளவு தியாகத்தைக் கொள்ள வேண்டும். நீர் குருதேவருடைய பணியாற்றும் பொருட்டு, உடல், உள்ளம், உயிர் யாவற்றையும் அர்ப்பணம் செய்திருக்கிறீர். அவர் பொருட்டு எல்லாவற்றையும் தியஜித்துவிட்டு வந்திருக்கிறீர். அவரது பணியை உத்தேசித்து நீர் இதையும் செய்யத்தான் வேண்டும், சகிப்புத் தன்மையை நீர் பழக வேண்டும், தியாகம் புரியவேண்டும், இதெல்லாம் குருதேவருடைய பணியை நாடித்தான். இறைவன் உமக்கு ஏராளமாக மங்களத்தை அளிப்பான்.

துறவி: இதையெல்லாம் நான் செய்யக் கூடுமாறு எனக்கு நீங்கள் ஆசீர்வாதம் செய்யுங்கள்.

மகாபுருஷர்: உம்மால் இதையெல்லாம் நன்றாகச் செய்யக்கூடும். நான் உம்மை நன்கு ஆசீர்வதிக்கின்றேன். ஆம், நன்கு ஆசீர்வதிக்கின்றேன். ஆனால் நீரும் குருதேவரி

டம் மனம் கசிந்து பிரார்த்தனை செய்ய வேண்டும். அவர் உமக்கு இன்னமும் அதிகமான சக்தியை அளிப்பார். நீர் அவர் பொருட்டு யாவற்றையும் விட்டு விட்டு வந்திருக்கின்றீர் அல்லவா? அவர் ஒன்றையும் உமக்கு அளிக்காமல் இரார். ஒரு சிலர் ஒன்று சேர்ந்து ஓரிடத்தில் அமைதியாக இருப்பது முடியாது போகுமாயின் அவருடைய பணி எவ்வாறு ஆற்றப்படுவதாகும்? அவர் பொருட்டு, நீர் யாவற்றையும் சகித்துக் கொண்டிருப்பீராக. மக்கள் நல்லது கூறினும் கெட்டது கூறினும் அதைப் பொருட்படுத்த வேண்டாம். நீங்கள் எல்லோரும் சாதுக்கள் ஆவீர்கள் உங்களை நல்லவர்கள் ஆக்கிக் கொள்ள, மேலோர் ஆக்கிக் கொள்ள, இங்கு வந்திருக்கின்றீர்கள். உங்களுடைய வாழ்வில் இதைத் தவிர வேறு வாசனை இல்லை, இச்சை இல்லை. நீங்கள் இறைவனையே வேண்டுகின்றீர்கள். அவருடைய பணியை யாற்றும் பொருட்டுப் பலர் கூடுமிடத்துச் சிறு மனஸ்தாபங்கள் தாற்காலிகமாக ஏற்படுவது இயல்புதான். அவை இவ்வாறு ஏற்படுவதில் வியப்படைய வேண்டியது ஒன்றுமில்லை, இதெல்லாம் சாதாரணமாக நிகழும் விஷயமே யாகும். இதெல்லாம் உமது உள்ளத்தைப் பாதிக்க வேண்டியதில்லை. இத்தகைய விஷயங்கள் தோன்றும், பின்னர் மறையும். உமது ஜீவிய லக்ஷியமோ பகவானை அடைவதல்லவா? உமது உள்ளத்தை ராகம், துவேஷம் (விருப்பு, வெறுப்பு) போன்ற இந்த அற்ப விஷயங்களெல்லாம் பாதிக்கா. இதுவே எமது உறுதியான எண்ணம். நீர் செய்து வருகின்ற இந்த வேலை எல்லாம் சேவை மனப்பான்மையுடன் தானே செய்யப்பட்டு வருகின்றது? அது உம்முடைய மனத்தை நாளுக்கு நாள் தூய்மைப்படுத்திக் கொண்டு வருகிறது நீர் செய்யும் பணியில் உமக்கு சுயநல சிந்தை சிறிதும் இல்லை. இந்தப் பணியைச் செய்வதுடன் கூட ஞான சாதனையையும் நீர் பயின்று வரவேண்டும். எப்பொழுதெல்லாம் சமயம் கிடைக்கின்றதோ அப்பொழுதெல்லாம் ஜபம் செய்வீராக, இறைவனைத் தியானிப்பீராக, முழு உள்ளத்துடன் பிரார்த்தனை புரிவீராக. எந்த நேரத்தில் உமது மனத்தில் ஏதேனும் பலவீனமோ அல்லது இல்லாக் குறையோ தோன்றுகின்றதோ, அப்பொழுது குருதேவரிடம் விண்ணப்பித்துக் கொள்வீராக. மிகுந்த தாகத்துடன் பிரார்த்தித்துக் கொண்டால் கட்டாயமாக அருள் வரும். அவருடைய திருநாமத்தை நன்றாக உச்சரிப்பீராக. நாமோச்சாரணம் உடலையும் உள்ளத்தையும் தூய்மைப்படுத்துகின்றது மனத்தின் மாசை அகற்றுகின்றது நீங்கள் சாதுக்கள் ஆகும் பொருட்டு எல்லாவற்றையும் தியஜித்து விட்டு வந்திருக்கிறீர்கள். உங்களுடைய வாழ்க்கை நோக்கமே பகவானை அடைவதுதான். 'புகழையும் இகழையும் சமமாக ஏற்பவன், மௌனி, எதைக் கொண்டும் திருப்தியுறுகின்றவன்' (துல்ய நிந்தாஸ்துதிர் மௌனீ ஸந்துஷ்டோ யேன கேனசித்) இந்த நிலைதானே உங்களுடைய இலக்ஷியம்! நீர் இறைவனிடம் மூழ்கிக் கிடக்க வேண்டும். யார் எதைச் சொன்னால் என்ன, எதைச் சொல்லாது போனால் என்ன, அதைப்பற்றி உமக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை.

இந்த மொழிகளைக் கேட்ட துறவி கண்ணீர் வடித்து அழுது கொண்டே மகாபுருஷ மகாராஜருடைய பாதங்களைப் பற்றியவராய், "மகாராஜ்! நிந்தை, துதி யாவற்றையும் ஒன்றாகக் கருதுமாறும் இறைவனிடமே மூழ்கிக் கிடக்குமாறும் எனக்கு ஆசீர்வாதம் செய்யுங்கள்" என்று வேண்டிக் கொண்டார்.

மகாபுருஷர் அவரை அமைதியுறச் செய்ய எவ்வளவோ முயன்றும் அவர் ஆறுதல் அடையாதவராய் தீனக் குரலில் குழந்தையைப் போல அழத் தொடங்கினார். அப்பொழுது மகாபுருஷர், "உமக்கு இந்த நிலை நிச்சயமாகக் கிட்டும்! குருதேவர் உம்மீது கிருபை வைத்துத் தானே உம்மைத் தம்மிடம் அழைப்பித்துக் கொண்டுள்ளார்" என்று கூறினார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு மகாபுருஷர் மீண்டும் மிகுந்த பரிவுடன் பேசலானார்: "கொஞ்ச நேரம் பூஜையறைக்குச் சென்று வாரும். அங்கு உட்கார்ந்து கொஞ்சம் ஜபம் செய்வீராக, பிரார்த்தனையும் செய்வீராக. அப்பொழுது மனம் சுமை நீங்கப் பெறுவதைக் காண்பீர். பிறகு குருதேவருடைய பிரசாதம் கொஞ்சம் புசியும். எப்பொழுதெல்லாம் உமக்கு ஒய்வு கிடைக்கின்றதோ அப்பொழுது இவ்விடத்திற்கு வாரும். இங்கு மடத்தில் சாதுக்களும் பிரம்மசாரிகளும் பலர் இருக்கின்றனர். அவர்களுடனெல்லாம் தாராளமாகக் கூடிப் பழகுவீராக."

நமது சிகர ஜோதி

ஓயாதோ என் கவலை

அஞ்ஞானி முதல் உயர்ந்த ஞான சாதகன் வரை, ஆண்டி முதல் அரசன் வரை, எந்நிலையில் உள்ளவரும் அடிக்கடி இவ்வுலக வாழ்வில் 'ஓயாதோ என் கவலை' என்று கூற நேர்கின்றது. கவலையால் விளையும் கேடுகளைக் கருதியே அதனை ஒழிக்க அனைவரும் அரும்பாடுபடுகின்றனர். சிதை என்பது செத்தாரை எரிக்கவல்லது; ஆனால் சிந்தையோ (கவலையோ) உயிருள்ள வரையும் எரிக்கும் வல்லமை பெற்றுள்ளது. கவலையால் தூக்கமின்மையும், இருதய பலவீனமும், இரத்த ஓட்ட சம்பந்தமான பிணிகளும், உடல் நலத்திற்கு இன்றியமையாத நீர்களை உண்டாக்கும் சில உறுப்புகளில் தொந்தரவுகளும் ஒருவனை எளிதே பற்றி இன்னற்கு ஆளாக்குகின்றன. இன்னும், நரம்பு நோயால் எழும் பற்பல கோளாறுகளும் கவலையெனும் வித்தினின்றே முளைக்கின்றன; நரம்பு நோயும் கவலைக்கு மீண்டும் வித்தாகின்றது; இவ்வாறு ஒன்று மற்றொன்றைப் பெருக்கி வர இரண்டும் வளர்ந்து வருகின்றன. கவலைப் பெருங்கடலில் வீழ்ந்தார் மூழ்குவதன்றி உயிரொடு மீளல் அரிதே. இக்கவலை தனி வாழ்க்கையில் மட்டுமன்றி சமூக வாழ்க்கையிலும் பெரும் பீடையைத் தருகின்றது. பாடுபட்டு வயிறு வளர்க்க வேண்டிய அவசியமுடையார்க்குக் கவலை நோயைக் கவனிக்க அவகாசம் நேர்வதே அரிதாகும்; எனினும் அவர்களிடத்தும் நரம்புக் கோளாறுகள் காணப்படுகின்றன. உடற்போஷணைக்காகவும் உடலின்பங்கட்காகவும் கவலையுறக் காரணம் இல்லாத தனவந்தரும் நடுத்தர மக்களும் வேறு காரணங்களால் கவலைக்கு ஆட்படுகின்றனர். பல்கலைக் கழக இளம் மாணவர்கள் பலரும், அனுபவ வாழ்க்கைக்குக் கிட்டவொண்ணாத இலக்ஷியங்களை நினைந்து ஏங்கியும், போட்டி மலிந்துள்ள உலகினில் தமது கோரிக்கைகளை அடைய முயல்வதற்கு அஞ்சியும், முயன்றும் வேண்டியதை வேண்டியாங்கே எய்தத் தவறியும் கவலை நோய்க்கு இரையாகின்றனர். வாழ்வின் அமைதியை அழித்தலில் கவலைக்கு ஈடானது வேறொன்றில்லையாதலாலும். உலகமக்களிற் பெரும்பாலரின் உள்ளங்களிலும் அது குடியாக உறைதலாலும், உலக நலனைக் கருதுவோர் அதனை ஒழித்தற்காகப் பலவாறு முயன்று வருகின்றனர்; அம்முயற்சியிற் கண்ணும் கருத்துமாய் இருப்பர் உலகத்துள்ள மனநூலாரும் ஞானநூலாரும்.

கவலைக்கும் அச்சத்திற்கும் உள்ள வேறுபாடு இங்கே கருதத்தக்கதாகும். ஒருவனது உயிருக்கோ, சுதந்தரத்திற்கோ, அறிவை நாடும் முயற்சிக்கோ, இயல்பாயுள்ள ஒரு தேவையினை நிரப்பும் செயலுக்கோ ஆபத்தை விளைக்கும் ஒரு பொருளையோ நிகழ்ச்சியையோ நேராக அறியும் போதுதான் அச்சம் எழுகின்றது; மனத்திலே தொந்தரவையோ போராட்டத்தையோ வெறுப்பையோ உண்டு பண்ணும் சில நிலைமைகளை நாம் அறியாதபோதும், உள்ளத்தின் கீழ்ப் பகுதியினின்றும் கவலை எழுகின்றது; காரணத்தை நாம் அறியாதிருக்கும்போதும், கவலை உதிக்கலாம். மதவெறி பிடித்த யானை நம்மை நோக்கி ஓடி வருவதைக் கண்டதும் நாம் அஞ்சுவோம்; புதிய நகர்க்கு வேலை பார்க்கச் செல்லும் தன் அருமை மகனைக் குறித்துத் தாய் அவனது கதி என்ன ஆகுமோ என்று கவலை கொள்வது இயல்பு. ஒரு கணத்துத் தோன்றும் அச்சத்தினும் நீண்ட நேரம் மனத்தை வருத்தும் கவலை கொடியதாகும். மனிதனது துயரத்தின் கூர்மைபங்குரிய மிகப்பெருங் காரணங்களுள் கவலையும் ஒன்றேயாம்.

கவலையை ஒழிக்கக் கருதுவார்க்கு அதனை உற்பத்தி செய்யும் காரணங்களை அறிந்து கொள்ளல் இன்றியமையாதது. முக்கியமான சில தொழில்களைச் செய்வதில் இயல்பாகவே மனிதனுக்கு ஓர் ஊக்கம் உள்ளது; அது அவனைத் தடுக்கவொண்ணாதவாறு சில முயற்சிகளில் தள்ளும். இத்தகைய இயல்பான முக்கிய ஊக்கங்களாவன (உந்தல்களாவன): தற்காப்பு, தற்பெருமையை வெளிப்படுத்தல், இனம் பெருக்கும் இச்சை, அறிவு, பிறரொடு கூடிவாழும் ஆசை முதலியன. இயற்கையான சில முக்கியத் தேவைகளை மனிதன் பெறாது போதற்குரிய சந்தர்ப்பங்கள் வாய்க்கும் போதெல்லாம் அவனுள்ளத்தில் கவலை உண்டாகின்றது - இதுவே மேற்றிசை மனநூலாரது கருத்தாகும். உடல் வாழ்க்கைக்கோ மன வாழ்க்கைக்கோ ஞான வாழ்க்கைக்கோ அவசியமானவற்றைப் பெறாது போகலாம் என்ற நிலைமை வரும் போது கவலை தானாகவே நெஞ்சத்துக் கவிகின்றது. உண்டி, உடை, உறக்கம், கலவி சம்பந்தமான தேவைகள் உடலைப் பற்றி எழுவன; அறிவு, அன்பு சங்கற்ப வலிமை சம்பந்தமான தேவைகள் மனதைப் பற்றி எழுவன; சுவர்க்கம், நரகம், இற

வாமை, பிறவாமை, பந்த நிலை, முக்திநிலை சம்பந்தமான தேவைகள் ஆன்மாவைப்பற்றி எழுகின்றன. இம்மூவகைத் தேவைகளைப் பெறுதற்கு இடையூறு நேருமோ என்ற நீண்ட ஆழ்ந்த நினைவே கவலையுருக் கொள்கின்றது. தக்க சம்பளத்தைத் தரும் உத்தியோகத்தை இழப்பின் வறுமை தம்மையும் தமது குடும்ப முழுதையும் பீடிக்குமே என்று கவலை கொள்வார் பலர்; இலக்கியத் துறையிற் பயிற்சி பெற்று உயர்ந்த பதவியில் அமர்ந்து புகழை நாட விரும்புவோன் தனது ஆற்றலுக்கு மிஞ்சிய செயலாகுமோ என்றும் தான் காதலிக்கும் மங்கை தன்னைக் காதலிப்பாளோ என்றும், துணிந்து பற்றிய வாழ்க்கையில் முன்பு தோல்வியுற்றது போலப் பின்னும் தோல்வி வருமோ என்றும் கவலையுறுவார் பலர்; பண்டு அறநெறி தவறிச் செய்த பாவங்களின் பயனாக இப்போது செய்யும் ஞான சாதன முயற்சியும் பயனற்றதாமோ என்று கவலையுறுவாரும் பலர். இக்கவலை தனி வாழ்க்கையைப் பற்றியதும் மட்டுமன்று; தாம் வருந்தும்போது, தமது குடும்பத்தார்க்கோ இனத்தார்க்கோ நாட்டினர்க்கோ அவமானமும் துன்பமும் நேருமோ என்ற கவலையால், கவலை ஸமூக வாழ்க்கையைப் பற்றியதுமாகும். கவலை மிகுதியால் ஒருவர் தமது கடமைகளை இயற்றும் திறமையையும் மன விருப்பையும் இழந்து, உடல் மெலிந்து மனத்தளர்ச்சியெய்திச் செயலற்ற நிலையை அடைந்து, நரப்புக் கோளாறுகளையும் மெய்ம்மறதியையும் மூர்ச்சை நோயையும், நீரிழிவு முதலிய கடும்பிணிகளையும் நாளடைவில் படைத்துக் கொள்ளலாகும். இத்தனை கேடுகளையும் பிறப்பிக்கும் கவலையின் அடிப்படைக் காரணத்தை மேற்றிசை மன நூலார் உள்ளவாறு ஆராய்ந்து காண இயலாது போயினர். நமது நாட்டு ஞானியரோ கவலையின் வேரினை அடிவரை சென்று ஆராய்ந்து அது மனிதனது மெய்யான இயல்பைப் பற்றியது என்கின்றனர். மனிதன் ஸத் சித் ஆனந்த வடிவமான ஆன்மாவே—அதாவது, அழியாத வாழ்வும் வரம்பிலா அறிவும் எல்லையற்ற ஆனந்தமும் இயல்பாகவே அமையப் பெற்ற, பிரகிருதிக்கு அதீதமான ஒரு மெய்ப்பொருளே. இம்மெய்ப்பொருள் உடலினோடு தொடர்பு கொள்ளும்போது, அதன் மெய்யியல்பு ஒருவாறு திரிந்து மாறுபாடாக அழுக்குற்ற அறிவிற்குத் தோன்றுகின்றது; உடல் வாழ்விலேயும் ஒருவன் மரணமிலாப் பெருவாழ்வையும் அளவுபடாத அறிவையும் வலிமையையும் இன்பத்தையும் பெறலாகும் என்ற பொய்க்கருத்து அதனால் உதிக்கின்றது; எனவே அவற்றை நாடும் ஆசை உண்ணின்றும் மனதைப் பிடித்து உந்த (தள்ள), அந்த ஆசையைத் தீர்க்கப் புறவுலகப் பொருள்களை நாடுகிறான். நிலையான ஆனந்தப் பேற்றிலுள்ள ஆசையே மனிதனது முயற்சிகள் அனைத்திற்கும் மூலகாரணம்; அவ்வாசையைத் தீர்க்க மனம் உண்முகப்பட்டு ஆன்மாவினைச் சார்தல் வேண்டும். ஆனால் மனிதன் மனத்தைப் புறமுகமாக்கி நிலையற்ற உலகில் நிலையான இன்பத்தை நாடக் காலமெல்லாம் அரும்பாடுபடுகிறான்; அம்முயற்சி வறிதாகின்றது கண்கூடு (பிரத்தியக்ஷம்). அதனை மறந்து உழைக்கும் மனிதனைத் தன் நோக்கம் நிறைவேறாதோ என்ற நினைவு பன்முறையும் வலிந்து தாக்குகின்றது—இதுவே கவலைக்கு அடிப்படைக் காரணம்.

இப்பேருண்மையை ஞானக் கண்ணால் உணரவும் அறிவால் அறியவும் இயலாத சாதாரண மக்களும் உலகியல் அறிவுடைய கல்விமான்களும் கவலையை ஒழிக்கத்தவறான முறைகள் பலவற்றை கையாளுகின்றனர். குடி வெறியாலும் அபின் முதலிய போதைச் சரக்குகளாலும் (மயக்கம் விளைவிக்கும் பொருள்களாலும்) எண்ணற்ற மக்கள் கவலையை மறக்க முயல்கின்றனர்; ஆனால் அந்தோ! அவர்கள் வெறிக்காளான சமயங்களில் மறக்கினும், அது நீங்கிய பொழுது முன்னினும் பன்மடங்கு கவலைக்கு இரையாகின்றனர்; நாளடைவில் வெறியையோ மயக்கத்தையோ ஊட்டும் பொருள்களையே சார்ந்து நிற்கும் பழக்கத்திற்கு அடிமையாகி அதனால் விளையும் நரம்புநோய்கட்கும் உடற்பிணிகட்கும் அறிவுக் கலக்கத்திற்கும் பலியாகின்றனர். விஞ்ஞான நூலாரோ மக்கட்கு உடல் தேவைகளை நீக்கவும் உடற் போகங்களை ஊட்டவும் கருதி, ஏராளமாகவும் மலிவாகவும் யந்திரங்கள் வாயிலாக உணவுப் பொருள்களையும் உடைகளையும் போக வசதிக்கான பொருள்களையும் தயாரித்துக் குவிக்கின்றனர். ஆனால் உடல் தேவைகளை நிறைவேற்றுவதொன்றால் மட்டும் கவலையை ஒழிக்கக்கூடுமாயின், செல்வச் செருக்கிலே மூழ்கியுள்ள அமெரிக்க நாட்டிலே கவலையால் விளையும் நரம்பு நோய்கள் குறைந்திருக்க வேண்டுமன்றோ? அது உண்மையன்று. விஞ்ஞான நாகரிகம் உடற்போகத்திற்குரிய பொருள்களைப் பொழிந்திருந்தும், அமெரிக்க நாட்டு மக்கள் பெற்றதைக்

கொண்டு மனத்திருத்தியடையாது, மேலும் மேலும் அத்தகைய பொருள்களை அவாவுகின்றனர். இதனால் நாளடைவில் மனத்தே கவலைப்பிணி தோன்றி, மனிதனைத் தன்னயச் செறுவில் தலை கீழாகத் தாழ்த்துகின்றது. ஸமூக இயல் வல்லார் ஜன ஸமூகத்தின் நிலைமையை நன்றாக உணர்தலினாலும், பாட்டாளிகளின் துயரங்களையும் குறைகளையும் நேரே கண்டறிதலினாலும், பொது மக்களுடைய கவலையைக் குறைக்கலாகும் என்கின்றனர்; இயற்கைச் சக்திகளைப் பயன்படுத்தி அவர்களுடைய குறைபாடுகளைக் குறைப்பது பெருநலம் பயக்கும் என்று கருதுகின்றனர்; யந்திர நாகரிகத்தின் கேடுகளை ஒருவாறு நீக்கவும் முயல்கின்றனர்; முதலாளிகளுக்கும் தொழிலாளிகட்கும் உள்ள தகராறுகளைத் தீர்க்கச் சட்டத்தின் உதவியையும் நாடுகின்றனர். இவை நன்முயற்சிகளே எனினும், உடல் தேவைகளை அளிக்கும் நோக்கத்தோடும், அவ்வாறு கவலை ஒழிக்கும் கருத்தோடும் தொழிற்சாலைகளை ஏற்படுத்தியதன் பயனாகத் தற்கொலையும், தீய செயல்களும், குடியும், மற்றும் ஸமூகத்திற்கும் அறத்திற்கும் உண்டாகும் வேறு தீங்குகளும் பெருகி வந்துள்ளன என்பது தொழிலாளிகளின் வாழ்க்கையைப் பற்றிய அறிக்கைகளினின்றும் வெளியாகின்றது. மத போதகர்கள் சிலர் கவலையை ஒழிக்கக் கவலை கொண்டு மக்களிடையே மனிதனது பாவ இயல்பையும் குற்ற உணர்ச்சியையும் பலவாறு வற்புறுத்தி அவர்களுடைய மனதை இறைவனிடம் திருப்ப முயல்கின்றனர். இத்தகைய போதனைகளால், நல்ல கதி கிடையாது நரகத்தழுந்துவதே விதியாகுமோ என்ற கவலை மக்களிடம் குடிகொள்கிறது. இவ்வாறு கவலையை ஒழிப்பதற்கான முயற்சிகள் பலவும் வேறொரு வழியில் கவலையைச் செழிக்கச் செய்யும் உரங்களாகின்றன.

இவ்வண்ணம் நன்முயற்சிகள் பலவும் வறிதாதற்குக் காரணம் இன்னதென்பதை அறிஞர்கள் உய்த்துணர வேண்டும். அக்காரணமாவது நமது தற்கால நாகரிகத்தின் இயல்பேயாம். இந்நாகரிகத்தின் அடிப்படையையும், அமைப்பையும், வாழ்க்கையை இன்ன நிலையிலிருந்து அது நோக்குகின்றது என்பதையும் நாம் ஆராய்தல் அவசியம். இந்த நாகரிகத்தின் பயனாக நரம்புப் பிணிகளும் மனக் கோளாறுகளும் நாளுக்குநாள் பெருகி வருகின்றன. இரண்டாவது உலகப் போரினால் விளைந்த மனப் பிணிகளைத் தீர்த்தற்கான செலவு முழுவதும் வரி செலுத்துவோரிடமிருந்து வசூலிக்க இயலாதென ஓர் அமெரிக்க நிபுணர் கூறினர் எனின் நிலைமை எத்துணைப் பயங்கரமானது என்பது தானே விளங்கும். இந்நிலைமைக்குக் காரணம் இந்த நாகரிகத்தின் கண்ணே அமைந்துள்ளது. இந்நாகரிகமுடையோர் வாழ்க்கையை நோக்குகின்ற நிலையிலேயே கவலை குடி கொண்டுள்ளது. வாழ்க்கையின் நோக்கம் மேலும் மேலும் உடைமைகளைப் பெருக்கிக் கொண்டு போதலே என்ற அடிப்படைக் கருத்து ஆசையை வளர்த்துக் கவலையை ஓங்குவிக்கின்றது. ஆசையை நிறைவேற்று முன்னும் நிறைவேற்றிய பின்னும் அதிருப்தி விடாது உறைகின்றது. ஆசைக்கோர் அளவில்லையாதலின், தனி மனிதர்களும் ஸமூகங்களும் நாடுகளும் அதிகாரத்தையும் செல்வத்தையும் பணம் பெருக்கும் சந்தர்ப்பங்களையும் பெறும் பேரவாக்கட்கு எளிதே ஆட்படுவது இயல்பே, சுயநயங் கருதும் ஆசை கொழுந்துவிட்டெரியவே, ஆசை நிறைவேறுமோ என்னும் கவலையும், நிறைவேறினும் பெற்றது நிலைக்குமோ என்ற கவலையும், தாமாகவே நிலைத்துவிடுகின்றன. உடைமைகளைப் பெருக்கும் நோக்கம் மனத்தே நிலவும் வரை, எத்துணை வலிய நாகரிகமும் நொறுங்கிப் பொடியாவது திண்ணம். அது அழிவுக்கே ஏதுவாகும் என்பதற்கு உரோமானியாது சரித்திரமே சான்று பகரும். அந்த நோக்கத்தை மாற்றி வாழ்க்கையைத் திருத்தியமைக்காதவரை, அறிவுடையோர் பற்பல துறைகளிலே பலவாறு முயன்று சங்கடங்களைத் தீர்க்கப் பாடுபடினும் நிலையான பயன் விளையாது போகும். கவலை ஓர் உருவம் நீக்கி வேறுருவங் கொள்ளும். தனி மனிதனது நலத்தை நோக்காது மனிதவர்க்கத்தின் பொது நலனைக் கருதுதல் வேண்டும் எனும் கொள்கையுடையார் தமது கொள்கையை எவ்வளவு பரக்கப் போதிக்கினும், சிற்றின்பத்தையே வாழ்க்கையின் நோக்கமாகக் கொள்ளும் வரை, தன்னலங் கருதாது பிறர் நலங் கருதும் மனப்பான்மை உதியாது போகும். ஸமூக இயல் வல்லாரது கொள்கையாவது, மக்கள் ஆனந்த வாழ்வையோ ஆக்கத்தையோ பெறவேண்டின், தமது செல்வத்தைப் பிறரோடு கலந்தனுபவிக்க வேண்டும் என்பது. தொழிலாளிகளும் முதலாளிகளும் ஒருவரையொருவர் நன்கறிந்து பரஸ்பர நலங்களிற் கருத்துடையாராலன்றி, வாணிபமும் யந்திரத் தொழிலும் ஒழுங்காக நடைபெறாது; விவாதங்களாலும் வேலை நிறுத்தங்களாலும் இடர்ப்படும் என்பர் அவர்; இவ்விரு கேடுகளையும் களைதற்

பொருட்டு, தொழிலாளர்க்கு உயர்ந்த கூலியும், வேலை நிலைக்கும் என்ற உறுதியும், சுக வாழ்க்கைக்குரிய சாதனங்களும் அளிக்கப்படல் வேண்டும் என்பர். முதலாளிகள் தமக்கு வரும் இலாபத்தில் ஒரு பகுதியைத் தொழிலாளர்க்கும் உரிமையாக்க வேண்டும் என்றும் புத்திமதி கூறுகின்றனர். கட்டாயம் நேரும்போது இங்ஙனம் செய்ய முதலாளிகள் துணிவார் என்பது உண்மையாயினும், அவ்வாறு செய்யாத சமயத்தும், வற்புறுத்தப்படும் சமயத்தும், மனமுறைப்பும் அதிருப்தியும் கவலையும் முளைக்காதிரா; ஆதலின் தன்னயங் கருதும் மனப்பான்மையை மாற்ற வழிதேடும் வரை, ஒருவன் பிறரது நலத்தைப் பேணும் விருப்புடையனாகான். ஐம்பொறி இன்பத்தைப் பெரிதெனப் போற்றும்வரை, கவலையையும் அதிருப்தியையும் விளைக்கும் சங்கடங்கள் தோன்றிக் கொண்டேயிருக்கும்.

பின் கவலையை ஒழிக்கும் வழிதான் யாதோ எனின், முதலில் நமது தேவைகளைக் குறைத்தல் வேண்டும்; வாழ்க்கையின் நோக்கத்தை உயர்த்தல் வேண்டும்; உடற்போகத்தால் திருப்தி பெறுவதற்குப் பதிலாக அறத்தாலும் ஞானத்தாலும் திருப்தியடைய முயலவேண்டும். ஞான வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட நாகரிகத்தை உலகில் எழுப்ப வேண்டும். "மனித வாழ்க்கையின் நிலைமைகளை அரசியல் முறையாலும் ஸமூக இயல் முறைகளாலும் எவ்வளவு செப்பனிட்டாலும், வாழ்விலுள்ள கேடுகளைப் போக்க வழி உண்டாகாது. மனம் திருந்தி உயர்ந்த நெறியை அவாவினாலன்றி வாழ்விலுள்ள தீங்குகள் நீங்கா" என்பர் சுவாமி விவேகானந்தர். ஞான வாழ்க்கையைப் பின்பற்றவேண்டும் என்னும் போது, உலக இன்பங்களைப் பற்றிய நினைவையோ, உடலின் தேவைகளை நிறைவேற்றுதலையோ ஆரம்பத்தில் முற்றும் பலவந்தமாக அடக்கிவிட வேண்டும் என்பதும் இல்லை. மனிதனுக்கு இயல்பாயுள்ள உயிர்வாழ்தற்குரிய (ஊக்கங்களை) உந்தல்களையும் ஸமூக வாழ்க்கைக்குரிய நிலைமைகளையும் கவனித்து, அவற்றை ஒழுங்கு படுத்துவதனால், வாழ்க்கையில் கவலையைப் பெரிதும் நீக்கிவிடல் இயலும் என்பதே உண்மை. உடலின்பம், மன இன்பம், அற இன்பம், ஞான இன்பம் என்பவற்றைப் படிப்படியாக ஒன்றின் மேலொன்றாக முறைப்படுத்தி வைத்தலும், அம்மேன்மையைச் சிந்தித்தலும் முதலில் வேண்டியவாகும். அற உணர்ச்சியே மனதை மேன்மைப்படுத்தி, ஆசையையும் தன்னயத்தையும் குறைக்க ஏதுவாகும். வாழ்க்கையின் நோக்கம் முதலில் அறத்தை நாடுதலும், பின்னர் ஒருபடி ஏறிப் பேரின்பத்தை நாடுதலுமே யென்ற உணர்ச்சி கிளம்புதல் மிக அவசியம்; அறத்தை ஆதாரமாகக் கொண்டு வாழ்க்கையை நடத்தும்போது, போதிய (மேலான) இன்பம் அடைய வசதி உள்ளது என்ற உறுதியும் மனத்தில் உதயமாக வேண்டும்; இன்னும் மனிதன் தன்னிடத்து அடங்கிக் கிடக்கும் வரம்பிலா அறிவையும் ஆற்றலையும் அன்பையும் இன்பத்தையும் வெளிக்கொணரக் கூடும் என்ற நம்பிக்கையும் திடப்பட வேண்டும். இவை வாய்க்குமாயின், வாழ்க்கையில் ஏமாற்றத்தாலும் தோல்வியாலும் பாவ உணர்ச்சியாலும் விளையும் மனப்பிணிகளும் நரம்புக் கோளாறும் தாமே மறையும். "ஒவ்வொரு மனிதனிடத்தும் தெய்வத்தன்மை ஒடுங்கிக் கிடக்கின்றது, அதனை முழுதும் வெளிப்படுத்தலே வாழ்க்கையின் நோக்கம்" என்ற உண்மையை உணர்வதாலே ஒரு மனிதன் தனது வாழ்வு திருந்துதற்கு அடிகோலியவனாவான்.

ஆனாலும், சில கொள்கைகளையும் கருத்துக்களையும் அறிவால் அறிவதனாலே மட்டும் ஒழுக்கம் திருத்தமடைவதில்லை. நரம்புப் பிணிகளும் மனக்கோளாறுகளும் கவலைகளும் மறைவதில்லை. மனத்தின் பரபரப்பையும் விறைப்பையும் ஒய்க்க, மனதை அமைதியாக்கித் தளர்ந்த நிலையில் வைக்கப் பழகல் வேண்டும். ஞான சாதனங்களைப் பழகுதல் இன்றியமையாதது. ஜெபம் தியானம் முதலிய சாதனங்களைப் பழகாது, மனதின் ஆசைகளைக் குறைக்கவோ, சுயநலத்தைத் தணிக்கவோ இயலாது. நற்சிந்தனையே மனத்தை உருவாக்கி ஆசைப்படும் இயல்பை அவிக்கும். 'எல்லாம் உன் உடைமையே, எல்லாம் உன் அடிமையே, எல்லாம் உன்னுடைய செயலே, எங்கணும் வியாபி நீ' என்று இறைவனைப் பற்றிச் சிந்தித்தல் சிலர்க்கு வாழ்வினைத் திருத்தியமைக்கும் வழியைக் காட்டும். இறைவனையே குறிப்பிட்ட காலங்களில் காலையும் மாலையும் தவறாது தியானிக்கும் பழக்கத்தால் மனத்திற்குத் திண்மை உண்டாகும். இதனால் மனமாற்றம் நிலையானதாகும். உலகத்திலுள்ள ஆனந்தங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்: அவை யாவன; விஷயானந்தம், தியானானந்தம், பிரம்மானந்தம் என்பவை. இவற்றுள்

முதலாவதினும் இரண்டாவது மிக மேம்பட்டது; மூன்றாவது இரண்டாவதினும் மிக மேம்பட்டது. உலகவாழ்க்கைக்குரிய உறுதிப்பொருள்களாகிய அறம் பொருள் இன்பம் வீடு எனும் நான்கினுள், பொருளும் இன்பமும் அறவழியாலே பெறப்படல் வேண்டும்; பின்னர் அறத்தையும் தாண்டி நல்வீடு பெறுதல் வேண்டும் - இதனையே வாழ்க்கைத் திட்டமாக அமைத்துக் கொள்ளல் வேண்டும். இறைவனையே உயர்ந்த (புருஷார்த்தமாக) பொருளாக—பரமார்த்தமாக நினைத்து வாழ மெல்ல மெல்லப் பழகுதல் வேண்டும். மிக உயர்ந்த இலக்ஷியத்தை மனிதன் பற்ற முயன்றாலன்றித் தாழ்ந்த இச்சைகளை ஒழிக்கும் நெறியைக் காண்பது அரிது. இறைவனைப் பற்றிய நம்பிக்கையின்றியே உயர்ந்த ஒழுக்கத்தைப் பெறலாகும் என்பர் சிலர். ஆயினும் அனைத்தினும் உயர்ந்த நிருவாண நிலை உண்டு என்பதில் நம்பிக்கையும், அதற்காக அருள்பாடுபட்டு 'அஷ்டாங்க நெறி' எனும் நெறியைப் பின்பற்றும் சிரத்தையும், அதனால் உலக வாழ்விற்கு அதீதமான திவ்விய வாழ்வில் எழும் விருப்பமும் அவசியம் வேண்டும் என்று பகவான் புத்தரும் வற்புறுத்தலானார். மனிதன் தன் மனத்தைத் தூல உலகிற்கு அப்பாலும் மன உலகிற்கு அப்பாலும் உள்ள ஞான உலகிற்குச் செலுத்தப் பழகினாலல்லது தூல மன உலக அவாக்களை வெல்லுதல் அரிதாகும். உலக இன்பங்களிற் கருத்து பதிந்திருக்கும்வரை, சாந்தி என்பது முயற் கொம்பேயாம். மனத்தில் அவாக்களும், அவற்றினைத் தொடர்ந்து வரும் காமம், சினம் முதலிய பகைகளும் திரியும் வரை, அது கலக்கமுடையதேயாம்; மனம் வெறிபிடித்ததேயாகும். அவ்வெறி நீங்கி, மனம் அடங்கியொடுங்கும் போது தான் பேரின்பப் பேறு கைகூடும்; அப்போதுதான் கவலையின் திவலையும் அற்றுப் போகும்.

மத வாழ்க்கையினை வற்புறுத்துவார் வாழ்க்கையையும் காணும் உலகத்தையும் உலகப் பொருள்களையும் வெறுக்கவேண்டும் என்கின்றனரே என்று குற்றங் கூறுவார் சிலர். ஆனால் அவ்வாறு பொய்க்குற்றஞ் சாட்டுதல் பொருத்தமன்று. உலகம் உள்ளது என்பதை எவரும் மறுக்கவில்லை; உலக உண்மையினும் மேலான உண்மை—இறைவனது உண்மையோ ஆன்மாவினது உண்மையோ—அழியாத உண்மையொன்றுள்ளது என்பதையே வற்புறுத்துகின்றனர் வேதாந்திகள். உடல் வாழ்வும், அதற்குரிய தேவைகளை அளித்தலும் இன்றியமையாதன என்பதில் ஐயமேயின்று; ஆனால் உடலுக்குரிய இன்பங்களை நாடுதலையே வாழ்க்கையின் நோக்கமாகக் கொள்ளுதல் அவலத்திற்கும் கவலைக்கும் கையாற்றுக்குமே முடி சூட்டுதலாகும். உலக சுகங்களையே மேலாகக் கருதுவதால் ஆசை வளர்ந்து முற்றி கவலைக் கடலில் நம்மை ஆழ்த்துகிறது. மக்களை இறைவனது வடிவமாகக் கருதி, அவர்களோடு உறவாட முயலும் போதுதான், ஸமூக வாழ்க்கையின் நிகழும் சங்கடங்கள் அறவே மறையும்; அப்போதுதான் ஸமூக வாழ்க்கையை ஒட்டிய கவலைகள் தீரும். இக்கருத்துக்களைப் பின்பற்றி, வாழ்க்கையின் நோக்கத்தை மாற்றி, நமக்குப் புலப்படும் மனப்பகுதியில் மாற்றத்தை உண்டு பண்ணுவோமாயின், நமக்குப் புலப்படாத மனப் பகுதிகளிலும் அக்கருத்துக்கள் மெல்ல மெல்லப் புகுந்து, அவற்றையும் செப்பனிடும்; இதனால் அங்கும் கவலையெழக் காரணம் இலதாகும். சுருங்கச் சொல்லின், நிலையற்ற துயர்மலிந்த உலகில் உள்ளவன் நிலைபெற்ற இன்பமயமான இறைவனை நாடினாலன்றிக் கவலை தீராதவனாவான். நிலையின்மையும் துயரமும் உலக இயல்புகளாம்; ஆதலின், பரம்பொருளைப் பற்றினார்க்கன்றிக் கவலைகள் ஒழியா. இக்காரணம் பற்றியே தாயுமானார், 'உள்ளே ஆனந்த வெள்ளம் பாயாதோ, அதனால் ஓயாதோ என் கவலை' என்று மனமிரங்கிக் கூறினர்; இந்த ஆனந்த வெள்ளம் பரம்பொருளையே சார்ந்ததாகும். திருவள்ளுவரும் 'தனக்குவமை யில்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால் மனக் கவலை மாற்றல் அரிது' என்று முடிபுகட்டினர். இதை உணர்ந்து மக்கள் உலக வாழ்க்கையெனும் கவலைக் கடலை நீந்திப் பேரின்பக் கரை சாருவாராக!

" தியானமின்றி மனம் அமைதியடைய முடியாது; அமைதியின்றி ஞானவாழ்வு இல்லை "

— சுவாமி பிரம்மானந்தர்.

பேரின்ப வாழ்வு

E. V. சோமசுந்தரம், B.A.

அத்யாயம் 3

1. இறைவன் திருமொழிகளைப் பணிவுடன் செவிமடுத்தலும் பலர் அவற்றைப் பாராட்டாமையும்.

'என் மகனே! என் சொற்களைக் கேள். மிகமிக இனிய மொழிகள். உலகின் சிந்தனையாளர்களுடையவும் மிகச் சிறந்த அறிவுள்ள மனிதர்களுடையவும் சொற்களைவிட மேலான அறிவு ததும்பும் மொழிகளைக்கேள்.

எனது மொழிகள் உயிரும், உயிருணர்வுமானவை. மனிதனது அற்ப அறிவால் அளவிடக் கூடியவை அல்ல.

வெறும் பாராட்டுதலுக்காக அவை வெளியிடப்படுபவை அல்ல. அவை அமைதியில் கேட்கப்படத் தக்கவை. மிகப் பணிவுடனும் அன்புடனும் பெறவேண்டியன அம்மொழிகள்—என்று இறைவன் இயம்பியருளினன்.

'ஓ இறைவனே! தங்களால் அறிவுறுத்தப் பெறுபவன் அருட்பேறு பெற்றவன். தங்களது உயர்ந்த சட்டத்தைத் தாங்களே புகட்டப் பெறுபவனும், அதனுல் இவ்வுலகில் கதியற்றவனுகாமலும், தீய நாட்கள் வாரது அருளப் பெறுபவனும் பாக்கியவானே என்றேன் நான்.

2. இறைவன் திருவாக்கு —

'ஆதியிலிருந்தே தீர்க்கதரிசிகளுக்கு அறிவுறுத்தி வருபவன் யானே, இன்று வரையும் கூட நான் இடைவிடாமல் அனைவருக்கும் அறிவுறுத்திக் கொண்டே இருக்கின்றேன். ஆனல் பலர் இறுகிய உள்ளத்தாராகி என் குரலைக் கேளாத செவிடராக உளர்'.

பெரும்பாலரான மக்கள், ஆண்டவன் அருள்வாக்குக்குச் செவி சாய்ப்பதைவிட மிகுந்த விருப்பத்துடன் உலகத்தினிடமே கவனத்தைச் செலுத்துகின்றனர். இறைவன் திருவுளப்படி நன்னெறியைப் பின்பற்றுவதைவிட விரைவாகத் தங்கள் ஊனிச்சைகளின் போக்கையே பின்பற்றுகிறுர்கள்.

குறுகிய காலத்திற்கு இருந்து அழியக் கூடியதும் துச்சமானதுமான பொருள்களைத் தருவதாக உலகம் சொல்கிறது. அதற்காக உலகிற்கு மிகப் பேரார்வத்தோடு ஓடி ஊழியம் புரிகிறுர்கள். நானே மிக உயர்ந்தவையும், என்றும் இருப்பவையுமான பொருள்களைத் தருவதாக உறுதி கூறுகிறேன். ஆயினும் மக்களது உள்ளம் ஆர்வமின்றியும் உணர்ச்சியின்றியும் இருக்கிறது.

உலகத்தையும் அதிலுள்ள செல்வச் சீமான்களையும் எவ்வளவு அக்கரையுடனும் கவனமாகவும் கீழ்படிந்து ஊழியம் செய்கிறுர்களோ அப்படி அனைத்திலும் என்னைப் பணிந்து எனக்கு ஊழியம் செய்பவன் எவன் உளன்?

ஓ! செல்வமும் மக்களும் நிறைந்த நகரமே, வெட்கப்பட்டுத் தலை குனி' என்கிறது ஒழுக்கக் கடல். ஏன் எனக் காரணம் கேட்பாயானல் அக்காரணத்தைக் கேட்பாயாக:—

'ஒரு சிறு தொகை வருவதானல் மனிதர் மிக நீண்ட ஒரு பிரயாணமும் போகத் தயாராக இருக்கிறுர்கள். ஆனல் என்றுமுள்ள அமரவாழ்வு பெறப் பலர் நிலத்தைவிட்டு ஒரு காலைத் தூக்கிவைக்க முயல்வது கூட அரிதாக இருக்கிறது.

மிகமிக அற்பமான வெகுமதியைக் கூடத் தேடி அலைகிறுர்கள். ஒரு சில்லரைக் காசுக்குச் சில சமயங்களில் வெட்கப்படக் கூடிய அளவுக்குப் போட்டிச் சண்டையிடுகின்றனர். வீணன பொருளுக்காகவும், அற்பமான உறுதிப் பேச்சுக்காகவும் மனிதர் இரவு பகலாகப்பாடுபட அஞ்சுவதில்லை?.

3. ஆனல் அந்தோ! மாறுதல் இல்லாத நலனுக்கு, விலை மதிக்க ஒண்ணுத வெகுமதிக்கு, மிக உயர்ந்த பெருமைக்கு, முடிவில்லாத தெய்வீகப் புகழ் ஒளிக்கு, இம்மனிதர் மிகச் சிறிது சிரமப்படவும் வெறுக்கிறுர்கள்.

அம்மனிதர் அழிவைத் தேடுவதில் காட்டும் ஆர்வத்தை விட நீ அழியா வாழ்வைத் தேடுவதில் அக்கரை குறைந்தவனுக இருக்கிறுய். ஆதலால் அதற்காக ஓ! குறை கூறும் சோம்பற் சேவகனே, நீ வெட்கப்படு!

நீ உண்மை நாட்டத்தில் இன்புறுவதைக் காட்டிலும் மிகவும் பேரளவில் அவர்கள் வீணனவற்றில் மகிழ்கின்றுர்களே!

சில சமயங்களில் அவர்கள் தாங்கள் எதிர்பார்த்தவைகளில் உண்மையாகவே ஏமாந்து போகிறுர்கள். ஆனல் என் உறுதி மொழியிலோ ஒருவரும் ஏமாற்றப்படுவது இல்லை. என்னை நம்புபவன் எவனும் வெறுங்கையனுகத் தூரத்தப்படுவதும் இல்லை.

நான் எதை அளிக்க உறுதி கொடுத்து உள்ளேனே அதைக் கண்டிப்பாகக் கொடுப்பேன். எதைச் சொல்லி உள்ளேனே அதை முடித்து வைப்பேன். கடைசி வரை எந்த ஒரு மனிதனாவது என் அன்பில் உண்மையாக இருப்பானாயினும் அப்படிச் செய்வேன் என்பது உறுதி.

நல்லோர்களுக்கு வெகுமதி அளிப்பவனும் நானே. என்னிடம் உறுதியான அன்போடு இருப்பவருக்கு உரமான ஆதரவாளனும் நானே.

4. எனது சொற்களை உனது உள்ளத்தில் எழுதி வைத்துக்கொள். அவற்றைப்பற்றி ஆழ்ந்து கவனமாகச் சிந்தனை செய். ஏனெனில் தீமைக் கவர்ச்சி வருங்கால் அவை உனக்கு மிகத் தேவையாக இருக்கும்.

நீ படிக்கும்போது பொருள் விளங்காதவை, அப்படித் தீமைக் கவர்ச்சி வரும்போது உனக்குத் தெரியவரும்.

என்னால் பொறுக்கப்பட்ட அன்பர்களை நான் இருவகையாக நண்ணுவது வழக்கம். ஒன்று தீமைக் கவர்ச்சிக்குள்ளாக்க, மற்றொன்று ஆறுதல் அளிப்பதற்காக.

நாள் தோறும் அவர்களுக்கு இருவகைப் பாடங்களைப் புகட்டுகிறேன். ஒரு பாடத்தால் அவர்களது தீ நெறிகளைக் கண்டிக்கிறேன். மற்றொன்றினால் அவர்களுடைய நற்பண்புகளை வளர்த்துக் கொள்ள ஊக்கித் தூண்டி விடுகிறேன்.

எனது நன்மொழிகளைப் பெற்றும் அவற்றை எள்ளி ஒழுகுபவன் தனது முடிவு நாளில் அவனது வாழ்வைக் கண்டிப்பாக மதிப்பிட ஒருவரை உடையவன் ஆவான்.

உள்ளம் குழைந்து பேரருள் வேண்டும் முறை

5. ஓ! ஆண்டவனே! என் இறைவனே! எனக்கு எதுவெல்லாம் நல்லதோ அதுவே தாங்கள். தங்கள் திரு முன்னர் பேசத் துணிவதற்கு நான் யார்? அடியேன் தங்களுடைய வறிய அற்ப அடியவன், மிகமிகத் துச்சமான புழு. என்னால் சொல்ல முடிவதற்கோ, நான் சொல்லத் துணிவதற்கோ அதிகமாக, மிகமிக வறிய, அற்பத் துகள் போன்ற புழு நான்.

ஆயினும் என்னை நினைந்து அருள்க ஓ! ஆண்டவனே. ஏனெனில் நான் ஏதும் அல்லன், ஒன்றும் அற்றவன், எதுவும் செய்யக் கூடாதவன்.

தாங்கள் நல்லவர், நேரியவர், தூய தெய்வீகர். தாங்கள் எல்லாம் செய்யவல்லவர். அனைத்தையும் முடித்து வைக்கக்கூடியவர். அனைத்தையும் முழுமையாக்கி நிரப்பக் கூடியவர். தீ நெறியோரையே வறியராகும்படி விடுவீர்.

தங்கள் கருணைப் பெருக்கை நினைவு கொண்டு, எனது உள்ளத்தைத் தங்கள் அருளால் நிரப்பி அருளுங்கள். தங்கள் படைப்பு வீணாகவோ, வெறும் பாழாகவோ போக விடாத தாங்கள் அவ்வாறு அருள்புரிந்திடுக.

6. தங்கள் கருணையாலும் அருளாலும் தாங்கள் எனக்கு வலிமை அளிக்கா விட்டால் எப்படி இந்த துயர் நிறைந்த துச்ச வாழ்வை அடியேன் ஏற்று நடத்த இயலும்?

வறண்ட நிலம் மழை நீர் வேண்டி வாடி நிற்பது போலத் தங்கள் அருள் மழை வேண்டி என் உள்ளம் உலர்ந்து ஆன்ம தாகமாக நிற்க நேரும்படி தாங்கள் தங்கள் இன்முகத்தை என்பால் இருந்து திருப்பிக் கொள்ளாதீர்கள். தங்களது அரிய ஆறுதல் அளிப்பதில் பின் வாங்காதீர்கள்.

தங்கள் திருவுள்ளத்தின்படி நடக்க ஓ! ஆண்டவனே! எனக்குப் பயிற்சி அளியுங்கள். தங்கள் அருட்பார்வையில் பணிவுடனும் தகுதியாகவும் வாழ என்னைப் பயிற்றுங்கள். ஏனெனில் தாங்களே எனது அறிவுத் தொகுதி. தாங்களே என்னை உண்மையில் அறிவீர்கள். இவ்வுலகம் படைக்கப்படுமுன் தாங்கள் என்னை அறிவீர்கள். மற்றும் இவ்வுலகில் அடியேன் பிறக்குமுன்னும் தாங்கள் என்னை அறிவீர்கள்.

இந்துமத ஸாரம்

(298-ம் பக்கத் தொடர்ச்சி)

இயற்கையிலிருந்து ஒரு பாடம் கற்றுக் கொள்ளுமாறு இந்து மதம் நமக்கு போதிக்கின்றது. தனி வாழ்க்கையிலும் ஸமூக வாழ்க்கையிலும், நமது முயற்சியும் கவனமும் செல்லும் எல்லாத் துறைகளிலும் நேரும் எல்லா வித சங்கடங்களையும் தீர்த்தற்கு, வேற்றுமைக்குள் ஒற்றுமை - பலவற்றுள் ஒருமை - என்னும் இவ்வொழுங்கையே

விடாது பற்றுமாறு நமக்கு இந்து மதம் புத்திமதியை அருளுகிறது. இவையெல்லாவற்றாலும், அடிப்படையாயுள்ள ஒற்றுமையை மறவாது இயன்றவரை எத்தனையோ வேற்றுமைகட்கு இடங்கொடுத்தல் நமக்கு நன்றாகும். இனிமையற்ற செயற்கைப் பொருளைப் போலன்றி, அருவருப்பான ஒரே தன்மைக்குப் பதிலாக இவ்வண்ணம் இயற்கையிற் காணும் தெய்வீக யாத்திரையை நாம் பின்பற்றி ஒழுக வேண்டும். பலவகைப்பட்ட பகுதிகள் ஒருங்கே இணைந்து ஒத்தமைதலே இயற்கையிற் காணும் தெய்வீக நியதியாம், யாதும் ஒருபடித்தான தன்மையன்று.

ஒவ்வோர் ஆன்மாவும் உள்ளொடுங்கிய தெய்வத் தன்மை வாய்ந்தது. ஒரு மனிதனுக்கும் மற்றொருவனுக்கும் உள்ள வேறுபாடு மேற்புறத்தே மட்டும் அமைந்து கிடப்பதொன்றாகும். உள்ளுக்குள்ளே நிலையான யாண்டுமுள்ள தெய்வீக ஒருமையே நிலவுகின்றது. இயற்கையிலே மேற்புறத்தே நாம் பிறக்கிறோம். அவ்வியற்கையின் அடியிலே மூழ்கி, பரமாத்மா என்னும் நடுப் பொருளை யடைந்து நாம் முக்தி பெறவேண்டும். இதுவே விளையாட்டு; இதை விளையாடி முடித்தல் வேண்டும். பரப்பொருளை அடைந்ததும் இவ்விளையாட்டு முடிந்து விடும்.

ஆதலால், பிறமக்களோடு உறவாடும் போது ஒருமையைத் தழுவி நிற்கும் எதுவும் நமது ஞான முன்னேற்றத்திற்கு நலமுடையதாகும். தன்னயமற்ற அன்பு ஒருமையை உண்டுபண்ணுவது; ஆதலின் அது நமக்கு நன்றாகும். இக்காரணம் பற்றியே நமது சகோதர மக்கட்குத் தன்னலமற்ற பணியை இயற்றுதல் வாயிலாக அத்தகைய அன்பை வளர்த்தல் வேண்டும் என நாம் வேண்டப்படுகின்றோம். தெய்விக ஒருமையெனும் இலக்ஷியத்தை நோக்கிச் செல்ல அது உறுதியாகத் துணை செய்யும். அத்தகைய பணியால் நமது நெஞ்சுகளை விரியச் செய்து, உலக முழுவதிலும் நமது ஆன்மா பரந்துள்ளது என்னும் உணர்ச்சியெழும் வரை நாம் விரிவடைந்து கொண்டே செல்லவேண்டும். உண்மை கூறின், நமது நெஞ்சை விரியச் செய்தலொன்றே ஞான வாழ்க்கையிலுள்ள இன்னிசையாகும்.

இந்துக்கள் துறவாலும் தொண்டாலும் தமது நெஞ்சுகளை விரியச் செய்யுமாறு போதிக்கப்படுகிறார்கள். இதுவே அவர்களுடைய தருமம் (மதப்) இந்துவின் வாழ்க்கை முறைத்திட்டத்திலே தன்னயமற்ற தொண்டு எனும் இத்தருமமே தலைசிறந்த ஓர் அம்சமாம். அவர்களுடைய சமூக வாழ்வுக் கட்டிடத்திற்கு ஆதாரக் கல்லாய் அமைவதும் அதுவே. ஒருவன் தனது பண்படாத தாழ்ந்த இயல்பைத் தாண்டிச் செல்வதற்கு அது துணை செய்யுமாதலின், அனைவர்க்கும் சித்த சுத்தியை எய்துதற்கு ஒரு வலிய சாதனமாக விதிக்கப்பட்டுள்ளது. அவனவனுடைய சுய தருமங்களை — விதிக்கப்பட்டுள்ள கடமைகளை — இயற்றுதல் வடிவமாக அத்தகைய தருமத்தைத் தொடர்ந்து பின்பற்றுதலே இந்துவின் வாழ்வு எனக் கருதப்படுகிறது.

மனிதர்கட்குள் ஒருவர்க்கொருவர் கொள்ளும் தொடர்பு, கடமைகள் வாயிலாக வெளியிடப்படுவதன்றி உரிமைகள் வாயிலாகவன்று. உரிமைகளை வற்புறுத்துதலும், அதனால் விளையும் அதிகாரப் போட்டியும் உரிமைப் போட்டியும் பன்முறை காமத்தினின்றும் செருக்கினின்றும் தடிப்புற்ற தன்னயத்தினின்றும் எழுகின்றன. ஆதலால் மனிதனை ஞானநலங் குன்றச் செய்து இழிவாக்கும் ஆபத்து அதனிடத்து உண்டு. இக்காரணம் பற்றியே, உண்மையாகவே நீதியான ஒரு காரியத்திற்காக முன்னின்று எதிர்த்தலை இந்துக்கட்கு சாஸ்திரங்கள் நல்லதென எடுத்துக் காட்டியிருப்பினும், அவர்கட்கு உரிமைகளைப் பற்றிய கவனத்தினும் அதிகமாகக் கடமைகளைப்பற்றிய கவனம் வற்புறுத்தப்பட்டுள்ளது. எவ்வாறெனில், விதிக்கப்பட்டுள்ள கடமைகளை இயற்றுதலால் தான் ஒருவன் தனது நெஞ்சை விரியச் செய்து, ஞான முன்னேற்றத்தை அடைகிறான். இக்காரணத்தால் ஒவ்வொருவர்க்கும் ஏற்பட்டுள்ள இக்கடமைகள் அவரவருடைய தருமம் எனப்படும். ஆக, பெற்றோரும் அவர்களுடைய குழந்தைகளும், கணவனும் மனைவியும், அரசனும் குடிகளும் அவரவர்க்குரிய தனித்தனியான தருமங்கள் (கடமைகள்) மூலம் ஒருவர்க்கொருவர் தொடர்புடையவராவார். இன்னும் ஒவ்வொருவர்க்கும் அவரது வாழ்க்கை நிலைக்கும் (ஆசிரமத்திற்குப்) சமூகத்தில் உள்ள பதவிக்கும் (வருணத்திற்குப்) ஏற்றவாறு அவரவரது சுவதருமம் எனப்படும் கடமைகளின் தொகுதியும் உண்டு. இக்கடமைகளில் ஒவ்வொன்றின்படிக்கும் ஒருவன் தனது தாழ்ந்த இயல்பிற்குரிய தீவிரமான சுயநலத்தால் வற்புறுத்திப் பெற விரும்பும் தேவைகளைப் புறக்கணித்துப் பிறர்க்குப் பணி செய்ய வேண்டியதாகின்றது. இவ்வாறு துறவா

லும் பணியாலும் ஒவ்வொரு இந்துவும் தனது நெஞ்சை விரியச் செய்து, ஒழுங்காகப பூரணமென்னும் இலக்ஷியத்தை நோக்கி முன் செல்ல வேண்டும். எல்லா ஆசைகளையும் துறந்து, இறைவனுக்குரிய வழிபாடாக மட்டும் கருதி ஒருவன் தனக்குரிய கடமைகளை இயற்றி வரும்போது, அவன் இலக்ஷியத்தை விரைவாக அடைகின்றான். (ஒப்பிடுக: கீதை 18-46). இவ்வாறு, ஓர் இந்துவின் வாழ்வு முழுவதும், சற்றும் பண்படாத நிலையிலிருந்து தொடங்கி மிகவுயர்ந்த நிலைவரை துறவும் பணியும் படிப்படியாக ஓங்கி வருமபடி அமைக்கப்பட்ட ஒரு திட்டமாக முடிகிறது; இத்திட்டத்தைப் பின்பற்றுவதனால் பலவகைப் பட்ட பொருள்கட்கும் நடுவே அமர்ந்துள்ள தெய்விக ஒருமைக் காட்சியைப் பெறும் உயர்வை மெல்லமெல்ல எய்துகிறான்.

பகையும், பொறாமையும், தன்னயமும், ஒரு மனிதனுக்கும் இன்னொருவனுக்கும் இடையேயுள்ள வேற்றுமையை வற்புறுத்தி பேதத்தையும் பிளவையும் விளைக்கும்; மற்றவையாவும் எதிர் கோடியிலே உள்ளன. வாழ்க்கையை ஒரு குறுகிய தன்னயமிக்க நிலையிலிருந்து நோக்குவதினால் உண்டாவன அவையனைத்தும்; அந்நிலை நெஞ்சம் சுருங்கியிருப்பதற்கு அறிகுறியாகின்றது. மனிதன் தனது மெய்யான தெய்விக இயல்பை அறியாமையால் தனது கண்ணிய இயல்பைப் பேதைமையினால் மதித்தொழுகும் போது, அவனது நெஞ்சு அம்மாதிரியான சுருக்கத்தை அடைகிறது. இது அவனது ஞான வாழ்க்கைக்கு நஞ்சனையதாகின்றது; ஆதலால் எல்லா வழியாலும் ஒழிக்கத் தக்கதாகும். இக்காரணத்தால் காமமும் கோபமும் பேராசையும், மோகமும், மதமும், பொறாமையும் இந்துக்களால் பகைவர்களாக (ரிபு எனக்) கருதப்படுகின்றன.

வெவ்வேறு வகைப்பட்ட பல பொருள்கட்குள்ளே நித்தியமாயுள்ள ஒரு பரம்பொருளைக் காணுமாறு ஒருவன் ஓய்வின்றி, முரண்பாடின்றி முயன்றுவரல் வேண்டும். இக்கொள்கையே இந்துவின் வாழ்க்கையிலே கேட்கப்படும் தலைசிறந்த சுருதியாகும்; அவ்வாழ்க்கையின் உயிர்நிலையாகும். இந்த மனப்பான்மை ஒன்றாலேயே இந்துவின் பண்பாட்டுக்குரிய தனிச்சிறப்புகளெல்லாம் அமையலாயின. பண்டைய இந்து ஜனஸமூகத்திற்குள்ளே புத்துயிரை ஊட்டியது இது; நீண்டதூரம் கைகளை விரித்துநீட்டி பலஅன்னிய சாதியரையும் அவர்களுடைய கொள்கைகளையும் தழுவி உள்ளடக்கிக் கொண்டு வாழும் திறமையை ஸமூகத்திற்கு அளித்ததும் இதுவே. வாளையோ நெருப்பையோ துணைக்கொண்டு இந்துக்கள் தமது பண்பாட்டை என்றும் பரப்பியவரல்லர். தூய்மையாலும் ஈசனைக் காணுவதாலும் பிறக்கும், எங்கும் பரந்த அன்பே அவர்களுடைய ஒரே ஆயுதமாயிற்று. பலவற்றுள்ளும் ஒருமையைக் காணும் இக்காட்சியின் திறனே, முதலில் இந்நாட்டுப் பழங்குடிகளையும், பின்னர் பாக்டிரிய கிரேக்கர்களையும் ஹூணர்களையும், சாகர்களையும், தென்கிழக்கு ஆசியாவைச் சார்ந்த வெகு தொலைவிலுள்ள நாடுகளின் பலவகை மக்களையும் பண்பாட்டில் மேம்பாடடையும்படிச் செய்து உயர்த்தியது; பின்னர்த் தம்மோடு ஒன்றாயிணைத்துக் கொண்டு தமது இனத்தை விரிவாக்கும் திறமையை அவர்கட்கு அளித்தது. உண்மையுரைக்கின், இக் காட்சியாலே இந்துமதம் தனது நலமிக்க பண்பாட்டின் மாட்சியை ஆசியா முழுவதும் அனுபவத்தில் உணரும் படிச்செய்யும் திறமையைப் பெற்றது; ஒருக்கால் மேற்றிசை நாகரிகத்தின் பிறப்பிடமாகிய கிரேக்கநாடும் அதனை உணர்ந்திருத்தல் கூடும் என்றும் கூறலாகும்.

இந்து மதத்தின் ஆட்சி பரவிவந்த முறையை எளிதாக உணரலாகும். அனைத்திற்கும் அடிப்படையான ஒருமையின் காட்சியால் பண்டைய இந்துக்கட்கு வியத்தகும் பரந்த பார்வையொன்று உண்டாக லாயிற்று; அதனால் அவர்கட்குப் பலவகைப்பட்ட இனங்களைச் சார்ந்த மக்களிடத்தும் அன்பு செலுத்தவும், அவர்களோடு அளவளாவவும், அவர்களுடைய வாழ்க்கையையும் நினைவுகளையும் உயர்த்தவும் திறன் விளைந்தது. அன்னியரை அழிக்கவோ, அவர்களுடைய பண்பாட்டுச் செல்வத்தைப் பாழ் படுத்தவோ கருதுதல் அவர்கட்கு இயலாத காரியமாயிற்று. மக்களால் ஒவ்வொரு சாதியும் பகவானாலே தோற்றுவிக்கப்பட்ட ஒரு வகுப்பன்றோ? அது ஒரு புனிதமான பொருளன்றோ? அதன் பண்பாட்டுக் காணியும், மனிதனின் பண்பாடு பல நூற்றாண்டுகளாக முதிர்ந்துவந்ததின் பயனாக உண்டாகிய ஒரு குறிப்பிட்ட தரத்தினைமட்டும் குறிக்கும் ஒருவகை வளர்ச்சிநிலை தானே? அன்னியர்களில் ஒவ்வொரு வகுப்பினையும் அதற்குரிய பண்பாட்டுக் காணியையும் அது எத்துணைப் பண்படாத நிலைமையில் இருப்பினும் அதன் புனிதத் தன்மையையும் மதிப்பையும் சீர்தூக்கி யுணரும் ஞானமுடையாயிருந்தனர் நம்மவர்.

இக்காரணம் பற்றியே இந்துக்கள் எல்லாவற்றையும் அவையவை நின்ற நிலையிலே அங்கீகரித்து, மெதுவாகத் தூண்டுதல் மாத்திரத்தால் அவற்றுக்கு மேல்நோக்கிச் செல்லும் இயல்பை அளிக்கலானார். பலவகைப்பட்ட இவ்வகுப்பினர்க்கும் இந்து மதத்தின் ஸாரத்தைமட்டும் ஊட்டி, அவர்கட்கும் இந்து மதத்தின் எல்லைக்குள் ஓர் இடத்தை அளித்து வந்தனர். அவர்களுடைய மத அநுஷ்டானங்களையும் ஸமூக வழக்கங்களையும் இந்து மதத்தின் அடிப்படைக் கொள்கைகட்கு ஏற்றவாறு ஒத்து அமையுமாறு செய்து, அவற்றை அவ்வண்ணமே இந்து மதத்திற்குட் புகுத்தி விட்டனர். இவ்விதமாகத்தான் வேறுபட்ட மத அநுஷ்டானங்களும் வாழ்வு முறைகளும் இந்து மதத்திற்குட் புகுந்தனவாக, நாளடைவில் அதனைக் கிட்டத்தட்ட எல்லா மதங்கட்கும் ஒரு சுருக்கம்போன்று அமையும்படி ஆக்கிற்று. அந்நாளில் இந்து மதத்திற்கு அன்னிய அம்சங்களை ஒன்றாய் இணைத்துத் தன்மய மாக்கிக் கொண்டு பிரிவடையும் திறமை வாய்ந்திருந்தது. இதுவே உயிரோடு வாழ்ந்து வருவதற்கு அடையாளம் என்பது உறுதி. பலவற்றுள் ஒருமையைக்காணும் காட்சி இந்து மக்கட்கு மங்காதிருக்கும் வரை இந்து மதம் சுறுசுறுப்பாக வாழ்ந்து வந்ததும் உண்மையேயாம்.

இக்காட்சி மங்கிய போதெல்லாம், இந்துக்கள் மந்தநிலையில் மூழ்கினர்; அவர்களுடைய சுறுசுறுப்பான மதம் ஏறக்குறைய இறக்கும் தருவாயிலிருந்தது போலாயிற்று. அடிப்படையிலிருந்த தெய்வீக ஒருமையை மறந்து இந்துக்கள் அத்தகைய ஞானவறட்சிக்காலங்களில் குறுகிய நெஞ்சும், மதவெறியும் கட்சி மனப்பான்மையும் உடையாராய், தம்து சொந்த ஸமூகத்தின் வகுப்புகளையும் உட்பிரிவுகளையும் வற்புறுத்தி, அன்னியர்களை எல்லாம் விலக்கலாயினர். அதிகாரப் போட்டியும் உரிமைப் போட்டியும் பின்தொடர, பகையும் தீங்கிழைக்கும் இயல்பும் தோன்றலாயின. ஞான முன்னேற்றத்திற்கு அடிப்படையான தேவைகளான துறவிலும், தொண்டிலும் இருந்த ஊற்றத்தைக் கைவிட்டு, அவர்கள் மதத்தின் வெளி யாசாரங்களில் மட்டும் ஆழ்ந்தவர்கள் ஆனார்கள். இவ்வண்ணம் பண்டைய கருத்துக்களினின்றும் இலக்கியங்களினின்றும் மேலும் மேலும் வெகு தூரம் விலகி, அம்மாதிரியான காலங்களில் தங்களுடைய மேன்மையுள்ள விரிந்த மதத்தினைப் பாழ்படுத்தினர்.

அத்தகைய காலங்கள் நீடித்து நில்லாது போயினமை இந்தியாவின் பாக்கியமாயிற்று. அக்காலங்கட்குப்பின் ஞானம் பொங்கியெழுந்து பரவும் காலங்கள் வருவதுண்டு. இன்று அம்மாதிரியான நற்காலமொன்று நம் எதிரே நிற்கக்காண்கின்றோம். நம் பண்பாடு வடிந்துவந்த காலம் சற்றுமுன்புதான் கழியலாயிற்று; மீண்டும் ஞானப் பேரலையொன்று வெகுதொலைவில் பொங்கியெழுந்து வந்துகொண்டிருக்கின்றது. மந்தமாயிருந்த காலம் கழிய இப்போது இந்துக்கள் தமது மதத்தின் அடிப்படைக்கொள்கைகளின் அருமை பெருமைகளை மீண்டும் உணரத் தொடங்கி விட்டனர். இயல்பாகவே இந்துமதம் தனது முன்னைய சுறுசுறுப்பான நிலையை அடைந்துவிட்டதற்குத் தெளிவான அடையாளங்களை வெளிக்காட்டத் தொடங்கிவிட்டது.

இந்நாளைய இந்துக்கள் உபநிடதங்களின் உயிரூட்டும் உபதேசங்களை மீண்டும் செவிசாய்த்துக் கேட்டுவருகின்றனர். பல நூற்றாண்டுகளாக நிகழ்ந்துவந்த சமயச் சண்டை சாதிச்சண்டைகளால் ஏற்பட்ட கூச்சலுக்கும் ஆரவாரத்திற்கும் மேலே உரத்த கனத்த குரலில், பண்டைய இருடியர் வாய்ப்பறையறைந்து கூறியுள்ள பின்வரும் உபதேசம் முழங்கிக்கொண்டிருக்கிறது: "இந்நிலையற்ற உலகிலுள்ள எதுவும் ஈசனாலே வியாபிக்கப்பட்டுள்ளதாக (என்று தியானிக்கப்பட வேண்டும்). (தாழ்ந்த இயல்பைத்) துறந்து அவையனைத்தையும் அநுபவிப்பாயாக. பிறருடைய சொத்தில் இச்சை வையாதே" (ஈச - உபநி - 1). ஒரே ஈசன் எல்லாவற்றிலும், எல்லாவற்றின் வழியாக ஊடுருவிப் பரந்திருப்பதாகவும் காணப்படவேண்டும். இவ்வாறாக இந்துக்கள் பலவற்றுள்ளும் ஒருமையைக் காணுதல் வாயிலாகத் தம்மைச்சூழ்ந்துள்ள வேற்றுமைகள் பலவற்றிலும் ஒற்றுமை நயத்தை நாடும் தமது பண்டைய உபதேசத்தைக் கடைப்பிடித்து வாழ்தற்குரிய திறனை மீண்டும் ஊட்டப்பெற்று வருகின்றனர். மனிதனது கவனத்தைக் கவரும் ஒவ்வொரு துறையிலும் தென்படும் வேற்றுமைகளின் பயனையும் நயத்தையும் பாராட்டும் அளவிற்கு அவர்கள் ஊக்கப்பட்டு வருகின்றனர்.

மதத்துறையில் உள்ள வேற்றுமை மனிதனது பண்பாட்டின் வளத்தைப் பெருக்குதற்கு ஏற்ற ஓர் ஏதுவாகவே கருதப்படுகின்றது; ஒரே சட்டை அனைவர்க்கும் பொருத்தமாக இருக்க இயலாதது போன்று, ஒரே

சமயமும் அனைவர்க்கும் பொருந்துதல் ஒண்ணாததாகும். ஒரு குடும்பத்திலே அதன் அங்கத்தினரான ஒவ்வொருவர்க்கும் அவரவரது தரத்திற்கு ஏற்றவாறு வெவ்வேறு உடைகளை அளிக்கவேண்டியிருத்தல்போல், மிகப் பெரிய மனிதக்குடும்பத்திலும் அதில் அடங்கிய பற்பல வகுப்பினர்க்கும் அவரவரது தனி ருசிகட்கும் திறமைகட்கும் தக்கவாறு வெவ்வேறு சமயங்களை அமைத்தளித்தலும் வேண்டியதாகிறது. மக்களின் மனப்போக்குகளிலும் திறமைகளிலும் உள்ள வேறுபாடுகளை இயற்கையிலுள்ள, ஒழிக்கவொண்ணாத ஓர் உண்மையாக ஒப்புக்கொள்ளலும், அவற்றுக்குத் தக்கவாறு தனித்தனி ஏற்பாடுகளைச் செய்தலும் அவசியமேயாகின்றன. பற்பல சமயங்களை உண்டாக்கியிருப்பதும் இந்த அவசியத்தை உணர்ந்தேயாம். வேறுபட்ட பல சமயங்கள் உலகில் நிலவிவருவதில் அடங்கிய உட்கருத்தும் இதுவே. அவையொன்றோடொன்று மேன்மைபற்றிப் போராடுவதற்கு யாதொரு காரணமும் இல்லை. ஒவ்வொன்றும் பூரணநிலையென்னும் முடிவை அடைதற்குரிய சரியான நெறியேயாம். ஒவ்வொன்றும் மனிதர்கட்குள் ஒரு குறிப்பிட்ட வகுப்பினர்க்குப் பயன்படுவதாகின்றது. மீண்டும் மீண்டும் இவ்வுண்மையை இந்துமத ஞானியரும் குரவரும் போதித்து வந்துள்ளனர். அதை மறந்து சிறிது காலங் கழித்தபின், இந்துக்கள் அதே உண்மையை ஸ்ரீராமகிருஷ்ணரது வாழ்க்கையாலும் உபதேசங்களாலும் மீண்டும் உணர்ந்து வருகின்றனர் ஒவ்வொரு வகுப்பினரும் தமக்குரிய சமயநெறியை விடாது பற்றி வரவேண்டும் என்பதையும், இதே சமயம் மற்ற சமயங்களையும் பணிவோடும் பக்தியோடும் நோக்கி, தாம் சேர நினைக்கும் அதே முடிவான இடத்தை அடைதற்காகப் பண்டைய காலங்களிற் கண்டு பிடிக்கப்பட்டுள்ள பலசிறப்புப்பட்ட நெறிகளாக அவற்றைக் கருதவேண்டும். இத்துறையிலும் பலவற்றுள் ஒருமையைக் காணுங்காட்சி எல்லாவித சாதிச் சண்டை சமயச் சண்டைகட்கும் ஒருமுடிவை உண்டு பண்ணும் என்பது திண்ணம்.

ஸமூக வாழ்க்கைத் துறையிலும் அதே காட்சி அற்புதங்களை நிகழ்த்தும் திறமுடையதாகும். அது இந்துஜன ஸமூகத்திற்கு மறுபடியும் இளமையை ஊட்டி, மனிதவர்க்கத்தின் ஞான முன்னேற்றத்திற்காக நிலையான உதவியை அளிக்கும் திறனையும் நல்குவதாகும். அதிகாரத்திற்காகவும் உரிமைக்காகவும் சிறுமைபற்றி நடைபெறும் போட்டி ஒழிக்கப் படல் வேண்டும். துறவையும் தொண்டினையும் இரு கண்களாகக் கொண்டு பொலிந்த மிகப் பழமை வாய்ந்த வாழ்க்கைத் திட்டத்தை மறுபடியும் உயிர்ப்பிக்க வேண்டும். கடமையைப் பற்றிய உணர்ச்சி பண்டு போல உரிமையைப்பற்றிய உணர்ச்சியை விடத் தலைசிறந்து நிற்றல் வேண்டும். ஸமூக வாழ்க்கையினுள்ளும் தனி மனிதர்கட்கும் வகுப்பினர்க்கும் உள்ள தொடர்புகளும் அக் கொள்கைக்கு இயைந்த முறையிலே திருத்தியமைக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு மனிதனும், மகனாயினும் வேலைக்காரனாயினும், இறைவனின் அம்சமேயாவான்; அந்நிலையிலே அவன் தக்க மரியாதையோடு நடத்தப்பட வேண்டும். ஜாதிகளிற் பல வகைகள் இருக்கலாம்; ஆயினும் அவற்றுக்குள்ளே எவ்விதப் பகையும் வஞ்சினமும் இருக்கக்கூடாது. ஒவ்வொரு வகுப்பும் புனிதமுடையதே. ஒவ்வொன்றுக்கும் அததற்குரிய இடமும் தொழிலும் உண்டு. இந்துக்களின் வாழ்க்கையெனும் இன்னிசையை உண்டுபண்ண ஒவ்வொன்றும் தன் தன் சுருதியை எழுப்பிக் கொண்டேயிருத்தல் அவசியம்; ஆதலின் தக்க மதிப்போடு ஒவ்வொன்றும் நடத்தப்பட வேண்டும். ஒன்றையும் தாழ்த்தி வைத்தல் தகாது. ஒவ்வொரு வகுப்பும் பண்பாட்டை உயர்த்துதற்கான வகையில் முயலத் தடையின்றிய வசதியைப் பெற்றிருக்க வேண்டும். தீண்டாமையைப் போன்றவை என்றைக்கும் கண்டித்து விலக்கப்பட வேண்டும். இக்காலைய இந்துக்கள் தமது மதத்தின் அடிப்படைக் கொள்கைகளைக் கடைப்பிடித்து, இவ்வாறு தமது ஸமூகத்தைப் புதிய வகையில் திருத்தியமைக்க வேண்டிய அவசியத்தை மேலும் மேலும் நன்குணர்ந்து வருகின்றனர்.

இந்தத்தடவை இதோடுமட்டும் அவர்கள் திருப்தியடைந்துவிடாமல் இன்னும் முன் செல்லலாம். அங்ஙனம் நமது ஸமூகத்தை ஒழுங்காகத் திருத்தி யமைக்கப்பட்டதன் பயனாகப் புத்துயிர் பெற்றபின்னர், பலவற்றுள் ஒருமையைக் காணும் தமது காட்சியை அவர்கள் பரந்த நோக்கோடு தமது ஸமூகமெனும் கட்டுப்பாட்டுக்கும் அப்பால் செலுத்திப் பயனடைவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. தன்னலமற்ற பணியியற்றல் எனும் நமது தருமம் இந் நிலவுலகில் எண்டிசைகளிலும் பரந்து விளங்கப் போகின்றது என்றும் தோன்றுகிறது. ஜாதிகளும் மனித இனங்களும் ஸமூகங்களும் இவை போன்ற பிறவும் பலவாறு வேறுபட்டிருக்கலாம். அதுபோன்றே அவர்களுடைய ஸமூக இயல் அரசியல் பொருளாதார இயல்

வாழ்க்கைகளின் அமைப்புகளும் வேறுபட்டிருக்கலாம். மனிதர்களின் தொகுதிகளில் உள்ள அத்தகைய வேறுபாடுகள் முழு மனித வர்க்கத்தின் அழகையும் வளத்தையும் மிகச் செய்கின்றன. அவை ஒவ்வொன்றின் வாயிலாகவும் இறைவனே தன்னை வெளிப்படுத்திவருகின்றனன். ஒவ்வொன்றும் இறைவனாற் படைக்கப்படும் ஒரு மாதிரியைக் குறிக்கின்றது. ஒவ்வொன்றும் புனிதமானது. ஒவ்வொன்றும் நிறைவேற்றுதற்குரிய பணியொன்று உள்ளது. மனித வளர்ச்சிக்காகப் பயன் பொதிந்த யாதேனும் ஒன்றை ஒவ்வொன்றும் அளித்தாதல் வேண்டும். எல்லா மனித வேறுபாடுகட்குள்ளும் அடியிலே உறையும் தெய்விக ஒருமையென்னும் மூலாதாரமான கொள்கை இந்து சாஸ்திரங்கள் போதித்துள்ள இக்கொள்கை— இனிப் புறக்கணிக்கப்படப் போவதில்லை.

எவரையும் பகைத்தலோ, துன்புறுத்தலோ, எவ்விதமாகவேனும் எவர்க்கும் தீங்கிழைத்தலோ தகாது அனைவர்க்கும். அவரவர் செல்லும் வழிகளில் இடையூறு நேரும்போதெல்லாம் அவற்றை நீக்குதல் மூலம் இயன்றவரை நாம் உதவிபுரிதல் வேண்டும். ஜாதி கொள்கை மனித இனம் நாடு என்னும் வேறுபாடின்றி, ஸமூக இயல் பொருளாதார இயல் அரசியல் ஞானம் எனும் துறைகளில் அனைவர்க்கும் தன்னலமற்ற பணிசெய்தலை நமது மதம் நம்மிடம் எதிர்பார்க்கின்றது. இதுவே நமது தருமம். நமது சொந்த ஸமூகத்தின் எல்லைக்குள் நமது பணியைச் சிறைப்படுத்திவையாது, உலகமெங்கும் அப்பணியைப் பரவச் செய்தல் வேண்டும். 'மிலேச்சர்' 'யவனர்' என்னும் மொழிகள் பகைமையையும் செருக்கையும் புலப்படுத்தும் அறிகுறிகளாதலின், அவை இந்துமதத்தின் உயிர்நிலைக்கு ஒத்தவையல்ல. ஞானம் கேடடைந்து வந்த ஏதோ ஒரு காலத்து அவை உற்பத்தியாயிருத்தல் வேண்டும். அனைவரையும் பரம்பொருளிடத்தும், பரம்பொருளை அனைவரிடத்தும் காணுதலையே இலக்ஷியமாகக் கொண்டவர் இந்துக்கள்; அந்நிலைக்கு ஒரு சிறிதும் ஒவ்வாத சிறுமைக்கு அம்மொழிகள் எடுத்துக் காட்டாகின்றன. நெருங்கிய எதிர்காலத்தில் இந்துக்கள் அம்மொழிகளைக் கண்டித்து ஒழித்து, ஒவ்வொரு மனித உயிரையும் நாராயணனாக (இறைவனாகக்) கருதவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்துக்கள் தமது மிகத் தொன்மை வாய்ந்த உபநிடதங்களின் உன்னத உபதேசமொழியால் ஆவேசம் பெற்று, அனைவர்க்கும் தன்னயமற்ற பணி செய்வதன் மூலம், பாரிலுள்ள பல்வேறு மக்களினங்களையும் தமக்குள் அடங்கியிருக்கும் தெய்விக ஒருமையை உணரச் செய்யவும், அவ்வாறாக உலக முழுவதிலும் அதுவரை கண்டிராத ஓர் இணையற்ற ஒற்றுமை இன்னிசையை உண்டாக்கவும் திறமையுடையவராவார். ஒருக்கால் இப்பணியை இயற்றுவதற்காகவே இந்துக்கள் இன்றுவரை நிலவுலகில் வாழ்ந்துவருகின்றனரோ என்று எண்ணவும் இடமுண்டாகிறது.

முற்றிற்று.

பட்டதாரிகளின் நிலைமையும் கடமையும்

(டர்பன் திரு. ச. மு. பிள்ளை)

தமிழ் நாட்டின் அருமை பெருமைகள் எல்லாம் பண்டைய நூல்களில் அடங்கிக் கிடக்கின்றன. அவற்றை இல்லை என்று மறுக்க நாம் முன்வரவில்லை. இக்காலத் தமிழ் நாட்டின் நிலை என்னவென்பதே நமது கேள்வி. பழைய பெருமைகளை மறவாதிருத்தல் சிறந்த குணமே. ஆனால் அவற்றையே பன்னிப்பன்னிப் பேசிக்கொண்டு வீண் காலம் கழிப்பது நற்குணமாகுமா? அறிவுடைமையாகுமா?

ஒரு நாட்டின் உயிர் நாடியாக விளங்குவது செல்வச் செழுமை. இதற்கு ஆதாரமாக இருப்பது விவசாய—வர்த்தக—கைத்தொழிற், கல்வி முறை. இக்கல்வி முறை நமக்குண்டா? இவற்றிற்குரிய அறிவாற்றல்கள் நம் மக்களிடம் உண்டா? நாட்டில் கல்லூரிகட்கும் கலாசாலைகட்கும் பள்ளிக்கூடங்கட்கும் பஞ்சமில்லை. இவற்றிற்காக ஆண்டுதோறும் செலவாகும் தொகையும் கொஞ்சமில்லை. கண்ட பயன் என்ன?

படித்தவர்கள்—பட்டதாரிகள் என்பவர்கள் நிலைமையோ சொல்ல வேண்டியதில்லை. ஒன்றே முக்கால் நூற்றாண்டுக்கு மேல், "நாகரிகம் வாய்ந்த"தென்று கூறப்படும்,

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழிருந்தும், நாம் உண்மைக் கல்வியில் - அறிவில் - ஆற்றலிற் சிறந்தோமா என்பதைச் சிந்திக்குமாறு வாசகர்களை வேண்டுகிறோம்.

நூற்றுக்குத் தொண்ணூறு மக்கள் எழுத்து வாசனையற்ற 'தற்குறி' கள்—பத்துப் பேர் வயிற்றுப் பாட்டுக்கு வழி காட்டாத கல்வியைப் படித்தவர்கள்—பட்டம் பெற்றவர்கள். வறுமையும் அறியாமையும் பிணியும் மக்களைப் பிடுங்கித் தின்று கொண்டிருக்கின்றன. இவையெல்லாம் நாகரிக ஆட்சியின் பயன் போலும்!

உயர்தரக் கல்வி பயின்ற பட்டதாரிகள் வேலையில்லாத் திண்டாட்டத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர். இது பட்டதாரிகளின் குற்றமல்ல. இந்தியச் சர்வகலாசாலைகள் மேற்கொண்டுள்ள கல்வி முறையின் ஊழல்களே, வேலையில்லாத் திண்டாட்டத்திற்குக் காரணமாகும் என்னும் உண்மையை ஒவ்வொரு அறிஞரும் கூறிவருகின்றனர். ஒவ்வொரு பட்டமளிப்பு விழாப் பிரசங்கத்திலும் இவ்வுண்மை சுட்டிக் காட்டப்படுகிறது. மேதாவிகள் பட்டதாரிகளின் பரிதாப நிலைமையைக் குறித்தும், இந்திய சர்வகலாசாலைக் கல்வியின் விபரீதப் போக்கைக் குறித்தும் அடிக்கடி கண்டித்துப் பேசி வருகின்றனர். எனினும் நிலைமையில் மாறுதல் ஒன்றும் காணோம். ஆகவே, வாழ வழிசெய்யாத பட்டக் கல்வியில் மக்கள் வைத்துள்ள மோகம் குறையும் நன்னாளை நாம் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

நமது நாடு விடுதலையின்பம் நுகர வேண்டுமானால், இப்போதைய கல்விமுறை அடியோடொழிய வேண்டும் என்றே வற்புறுத்துகின்றோம். நாட்டிலுள்ள எல்லா மக்களும் கல்வியறிவு படைத்தவர்களாக விளங்கவேண்டும். கல்வி என்றால் வெறும் இலக்கியக் கல்வியல்ல. உண்டிக்கும் உடைக்கும் வழி காட்டும் கல்வியே இக்காலத்தில் இன்றியமையாததாக இருக்கின்றது. விவசாயம்-கைத்தொழில்-வியாபார சம்பந்தமான கல்வி முறையே இப்பொழுது முதன்மையாக வேண்டற்பாலது. அரசாங்கத்தாரும் பொது ஜனத் தலைவர்களும் இவ்விஷயத்தில் தீவிரமான சிரத்தை காட்டினாலொழிய, நமது நாடு முன்னேற்றமடையாமலே இருந்து கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. இந்நிலையில் பட்டதாரிகளின்கடமை என்ன என்பதை ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டும்.

நமது பட்டதாரிகள் எல்லோரும் கிராமப் புனருத்தாரணத்திற்காகத் தொண்டாற்ற வேண்டும். கிராமங்கள் செழுமை அடைந்தாலொழிய நாடு முன்னேறப் போவதில்லை—மக்கள் சுகமடையப் போவதில்லை என்பது உறுதி. முதலில் பட்டதாரிகள் சாதி, சமய வேற்றுமைகளை விட்டொழிக்க வேண்டும். நமது நாட்டின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகளாக விளங்குவன சாதி, சமய வேற்றுமைகள், மூடப் பழக்க வழக்கங்கள் என்னும் உண்மை எல்லா அறிஞர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டு வருகிறது.

உண்மைச் சமயங்களில் எத்தகைய வேற்றுமைகட்கும் இடமில்லை என்பது தெளிவு. சைவ சமயத்தில் நந்தனார் போன்றவர்களும் வைஷ்ணவ சமயத்தில் திருப்பாணாழ்வார் போன்றவர்களும், இழிகுலத்தோர் என்று கருதப்பட்டும், மகான்களாகவும் அவதார புருஷர்களாகவும் போற்றப் படுகிறார்கள். இத்தகைய சிறப்பு வாய்ந்த சமயங்களைப் பின்பற்றுவதாகச் சொல்லிக் கொள்ளும் மக்கள், சாதி, சமய, வேற்றுமைகளைப் பாராட்டுவது மிக மிக இழிவாகும் என்பதை நாம் விரிக்கவும் வேண்டுமோ?

நமது பட்டதாரிகள் தூய - எளிய வாழ்க்கைமுறையை மேற்கொண்டு தொண்டில் முனைந்து நிற்கவேண்டும். கிராம மக்களுடன் நெருங்கிப் பழகத் தெரிந்து கொள்ளவேண்டும். இப்பொழுது இவர்கள் கற்றிருக்கும் பட்டக் கல்வி ஆடம்பர வாழ்க்கையில் வேட்கையைத் தூண்டி அல்லற்படுத்தி வருவது வருந்தத்தக்கது. இதனால் பட்டதாரிகள் கிராம மக்களைக் கண்டால் அருவருக்கவும், கிராம வாழ்வை வெறுக்கவும் செய்கிறார்கள். இந்நிலைமை அடியோடு மாறுதலடைந்து ஆங்கிலங் கற்ற ஒவ்வொரு வாலிபரும், கிராம வாழ்வை இன்ப வாழ்வாக மதிக்கும்படியான நன்னிலைமை ஏற்படவேண்டுமென்று விரும்புகின்றோம்.

பட்டதாரிகள் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் இக்காலத்தில் அவர்கள் கிராமங்களுக்குத் தொண்டு புரிவதால் இருவித நன்மைகள் ஏற்படுகின்றன. ஒன்று தேசத்தொண்டு, இரண்டு வயிற்றுப்பாட்டுக்கு ஏதோ சொற்ப ஊதியம். தேசத் தொண்டு என்பது சரி—வயிற்றுப்பாட்டுக்கு வழி என்ன என்று சிலர் வினவலாம். தூய எளிய வாழ்வை மேற்கொண்ட — உண்மைத் தொண்டில் ஆர்வமுள்ள ஒரு பட்டதாரியை ஒரு கிராமம் சும்மா பட்டினி போட்டுவிடும் என்று நாம் நம்பவில்லை, கிராம மக்கட்குரிய கல்வி, சுகாதாரம், தொழில், ஒற்றுமை முதலியவற்றைப்

போதிக்கும் ஒரு தொண்டரை — அறிஞரை மக்கள் பட்டினி போட்டு விடுவார்களா என்று கேட்கின்றோம்.

கிராமங்கட்குச் செல்லும் பட்டதாரிகள் மக்கட்கு எல்லாத் துறைகளிலும் புத்துணர்வு பிறக்கச் செய்யவேண்டும். நமது நாடு விவசாய நாடு. விவசாயத்திற் கேற்ற இயற்கை நீர் நிலவளங்கள் மிகுதியும் படைத்த நாடு, இந்தியாவைப்போல் உலகில் வேறொன்றும் இல்லையென்றே கூறலாம்; இருந்தும் பயன் என்ன? நமது விவசாயம் பழைய முறையிலேயே போய்க்கொண்டிருக்கிறது. புதிய புதிய சாஸ்திரீய முறைகளை நம் மக்கள் அறியார். அறிந்த ஒரு சிலரும் அநுபவத்தில் கொணரவில்லை. அமெரிக்கா போன்ற மேனாடுகள் விவசாயத்தைச் சாஸ்திரீயமாக நடத்துகின்றன. கற்பாறைகளிலும் பலன் கண்டு வருகின்றன. ஆகவே, இத்துறையில் பட்டதாரிகள் கிராம மக்கட்குப் பலவிதத்திலும் ஊக்கமும் உற்சாகமும் அளிக்கலாம் என்று நம்புகிறோம்.

இந்தியாவின் கைத்தொழில்களும், வர்த்தகமும் பண்டைக் காலத்தில் உலகப்பிரசித்தி பெற்று விளங்கின. இக்காலத்திலோ? வெட்கம்! வெட்கம்!! உண்டிக்கும் உடைக்குமே பிற நாடுகளை இன்னும் எதிர் பார்க்கவேண்டிய இழி நிலையில் வாழ்ந்து வருகின்றோம். இப்படி பொதுமக்கள் அறிவு கெட்டு, உணர்ச்சியற்றுக் கிடப்பது பெரிதும் வருந்தத் தக்கதாகும். மக்கள் சிறிதளவேனும் அறிவும் உணர்ச்சியும் ஒற்றுமையும் பெற்றிருந்தால், இன்றுள்ள நிலையில் நாம் இருக்க மாட்டோம் என்பது திண்ணம். ஆகவே இம்மக்களிடையே அடங்கிக் கிடக்கும் உணர்வைத் தட்டி எழுப்ப வேண்டியது தேச பக்தியுள்ள பட்டதாரிகளின் கடமையாகும்.

நம்மில், எங்கு நோக்கினாலும் கக்ஷிப் பிரதி கக்ஷிச் சண்டைகள் நிறைந்திருக்கக் காணலாம். இவ்விஷயத்தில் மக்கள் கடமை என்ன என்பதைப் பட்டதாரிகள் நன்கு விளக்கிக் காட்டவேண்டும். வாசக சாலைகள் ஏற்படுத்திப் பத்திரிகை படிக்கும் அறிவை உண்டாக்க வேண்டும். பெண் மணிகளின் உரிமைகள் என்ன என்பதை விவரிக்க வேண்டும். கிராம சுகாதாரம், தொழில், ஒற்றுமை முதலிய விஷயங்களில் தக்கவழி காட்டவேண்டும். இப்புண்ணிய கைங்கரியத்தில் பட்டதாரிகள் மனம் செலுத்தவேண்டிய காலம் இதுவேயாகும்.

தமையனை வழிபட்ட தம்பி

டி. ஆர். ராமநாத சாஸ்திரி, B. O. L.

[கல்யாணிலிருந்து மொழிபெயர்த்தது.]

காளியன்னையின் கோயில் கிராமத்திலிருந்து நான்கு மைல் தொலைவில் இருந்தது. வரிசை வரிசையாக உயர்ந்து நிமிர்ந்து நின்ற தென்னந் தோப்பைக் கடந்து அனிலன் சென்று கொண்டிருந்தான். பிறகு பாக்கு மரங்கள் மனதைக்கவருமாறு நின்று அனிலனுக்கு வழிவிட்டன. மேலும் ஓர் தோட்டத்தைக் கடந்து சென்றான் அவன். நெல் வயல்களின் மையத்திலிருந்த வரப்பின் மேலும் அவன் நடந்து சென்றான். பொன்னிறங்கொண்ட நெற்கதிர்கள் மேல் கதிரவனின் ஒளிபட்டு விளங்கிக் கொண்டிருந்த இயற்கையன்னையின் நிகரற்ற அழகில் ஈடுபட்ட உள்ளத்தைப்பெற்றவனாய், தன்னையே மறந்து சென்ற அனிலன் ஈச்ச மரங்களிற்கப்பாலுள்ள ஓர் அழகிய குளத்தில் கைகால்களைக் கழுவிப் பணிவுடன் கோயிலுக்குள் நுழைந்தான். கிராமம் மிகத் தொலைவில் இருந்தமையினால் வெகுசிலர் தான் அவ்வாலயத்திற்கு வருவர் என்பது அனிலனுள்ளத்தில் நன்கு விளங்கியது.

காளியன்னையின் அடிகளில் பணிவுடன் வணங்கிவிட்டு எழுந்து நின்றான் அனிலன். அன்னையின் திருவடிகளில் மலர்கள் குவிந்து கிடந்தன. எதிரில் நெய் நிறைந்த விளக்கொன்று ஒளியைப் பரப்பிற்று. நெய் மணம் கலந்த நறுமணப்புகை அவ்வறையின் பெருமையை அதிகமாக்கிற்று.

பிரமோதபாபு அன்னையின் திருவுருவத்தின் எதிரில் வீற்றிருந்தார். அவருடைய கால்கள் ஒன்றின் மேல் ஒன்றாக அமர்ந்திருந்தன. கண்கள் மூடிய வாறே இருந்தன, ஓரங்களில் வழியாக நீர் மாத்திரம் பெருகிக்

கொண்டேயிருந்தது. அவர் மனம் அன்னையிடம் ஒன்ருகியிருந்ததென்பதை அனிலன் அறிந்தான். தியானம் கலைந்தபின் அவரையும் அழைத்துக் கொண்டு கிராமத்திற்குச் செல்லலாமென்று அங்கேயே நின்ருன் அனிலன். சிறிது நேரத்திற்குப் பின் அவ்வறையிலேயே மற்ருெருபுறத்தில் ஓர் சிலை இருப்பதையும் கண்டான். அது பளிங்குக் கல்லாலாக்கப்பட்டிருந்தது. அதன் கால்களிலும் மலர்க்குவியல் இருந்தது. அதை நன்ருக உற்றுப்பார்த்தான். அது ஓர் ஆடவருடைய சிலையென்றும், தேவர் உருவம் அல்லவென்றும் அனிலனுக்கு நன்ருகத்தெரிந்திருந்தது.

ஆங்கில நாகரீகம் பரவத்தொடங்கிய அந்நாட்களில் மேல்நாட்டுக் கல்வியிற்றேர்ச்சி பெற்றவர் ஆலயவழிபாட்டை மதிக்காதிருந்தனர். ஆனல் உயர்ந்த அறிஞரும் ஆங்கிலக் கல்வி பயின்றவருமான பிரமோதபாபு ஆலயத்திற்கு நாள் தோறும் செல்வதையறிந்த அனிலன் அவரிடம் உயர்ந்த மதிப்பு வைத்திருந்தான்.

ஆனல் பிரமோத பாபு வெறும் மனிதனுடைய சிலையைப் பூஜிக்கமாட்டார் என்று நம்பிக்கை கொண்ட அனிலன் அது ஒரு பெரிய மகானுடையய சிலையாகவே இருக்கவேண்டும் என்று தீர்மானித்தான். பிரமோதபாபுவின் ஆசிரியரை நேரில் அனிலன் பார்த்திருந்தமையினல் அது ஆசிரியருடையதல்லவென்றும் அவனுக்கு விளங்கிவிட்டது.

பிரமோத பாபுவிற்கு அன்னை காளியிடம் மிக உயர்ந்த அன்பு உண்டென்று அறிந்திருந்த அனிலன் அவருடைய உள்ளத்தின் ஒருமையைக் கலைக்கக் கூடாதென எவ்வித மான சந்தடியும் இல்லாமல் தியானம் கலையும் நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

அன்று பிரமோத பாபு வெகுநேரம் வரை எழுந்திருக்கவே இல்லை. அந்தச்சிலை வடிவமாக அமர்ந்துள்ள பெரியாரின் வாழ்க்கைச் சம்பவங்களை அறியவேண்டுமென்று உள்ளத்தில் ஏற்பட்ட அவாவை அன்று தீர்த்துக் கொள்ள முடியாதென்று அனிலன் திரும்பிவிட்டான்.

சில நாட்கள் சென்றன. பிரமோத பாபு ஆலயத்திற்குச் சென்றதையறிந்த அனிலன் மாலை நேரத்தில் கோயிலை நோக்கி விரைந்தான். ஆலயத்தில் வழிபாடுசெய்தபின் பிரமோத பாபு தியானம் கலைந்து வெளியில் வருவதற்காகக் காத்துக்கொண்டிருந்தான்.

அன்றும் வெகுநேரம் ஆனபின்புதான் பிரமோத பாபு தியானத்திலிருந்து எழுந்தார். அனிலன் தனக்காகக்காத்துக் கொண்டிருப்பதையறிந்து அவனையும் அழைத்துக் கொண்டு கோயிலினின்று கிளம்பினர்.

குளத்தின்கரையில் உட்கார்ந்து இயற்கையன்னையின் காட்சியை அனுபவித்து விட்டு வீடு போகலாம் என்று அனிலன் சொல்லவே பிரமோதபாபுவும் அதை ஏற்ருர். இருவரும் உட்கார்ந்தனர்.

அன்று பூர்ணிமை. கருவானில் முழு மதி தன் குளிர் கிரணங்களைப் பாகுபாடின்றி எல்லோர் மீதும் வீசிக் கொண்டிருந்தான். குளம் அலைக் கரங்களால் சந்திரனை வரவேற்றது. காற்று மெதுவாக வீசிற்று.

அனிலன் ஒரு முறை கோயிலிலுள்ள மற்ருெரு பளிங்குப்பதுமையைப்பற்றிப் பிரமோதபாபுவிடம் கேட்டாயிற்று. விடையெதுவும் பிரமோதபாபுவிடமிருந்து தோன்ருமையினல் மறுபடியும் 'பாபு! அந்தப்பதுமை யாருடையது? அந்தப்பதுமையினல் தாம் பெற்ற நலன் யாது? அதை வெளியிடுவதனல் தமக்குத் தீங்கெதுவும் ஏற்படாதென்று நம்பிக்கை இருப்பின் அதை எனக்கு அறிவித்து என் உள்ளத்தின் அவாவைத் தணிக்க வேண்டுகிறேன்' என்று அனிலன் கூறினன்.

'அதை வெளியிடுவதனல் ஒரு தீங்கும் ஏற்படாது. நீ இப்பொழுதுதான் முதன்முறையாக என் கிராமத்திற்கு வந்திருக்கிருய். அதனல்தான் உனக்கு இதைப்பற்றித்தெரியவில்லை. உன்போன்ற நேர்மையான நண்பனுக்குத் தெரிவிக்க முடியாத செய்தியும் உண்டா? இது என் அண்ணுவினுடைய உருவம். இவர் மனிதரல்ல. இவர் ஓர் தேவதை. தைவத்தின் போக்கினல் எனக்கு அண்ணனுடைய அன்புக் குடை நிழலில் நெடுங்காலம் வாழமுடியாதுபோய்விட்டது. அதனல்தான் நான் அவருடைய உருவத்தையமைத்து நாள் தவருது பூஜித்து வருகிறேன். இதனல் என் உள்ளம் தூய்மை பெறுகிறது. இன்று நான் பெற்றுள்ள கல்வி, செல்வம், பெருமை, புகழ் முதலியவையெல்லாம் அண்ணனுடைய அருளினல்தான் என்ருல் மிகையாகாது ஏன்! அன்னைகட்கெல்லாம் அன்னையான காளி தேவியின் திருவடிகளில் நான் கொண்ட அன்பு அண்ணனுடைய உபதேசங்களினல் தான் உண்டாயிற்று' என்று அவர் கூறினர்.

மேலும் அவர் கூறினர்.

'தோழா! அதோ பார். குளத்தில் மீன்கள் அலைகளுடன் நீர் மட்டத்திற்கு ஒரு முழத்திற்கு மேல் துள்ளிக் குதிக்கின்றன.

பார்த்தாயா! சந்திரனின் கிரணங்கள் அவற்றின் நிறம் வெள்ளியைப் போலிருக்கிறதல்லவா? ஏழு ஆண்டுகட்கு முன்பு இச்சிறு மீன்களைப் போலவே நானும் கவலையற்று வாழ்ந்து வந்தேன். என் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும், இன்பமும், அமைதியும் மகிழ்வும் நிரம்பியிருந்தது. கவலை, வருத்தம் இவற்றின் பொருளே எனக்கு விளங்காதிருந்தது. அந்தோ! இப்பொழுது அந்தக்கவலையின்மையும், மகிழ்வும் என்னிடமிருந்து பலவந்தமாகக் கொள்ளையிடப்பட்டன.

தந்தையைக் காணும்பேறு எனக்குஇல்லை. நான் ஐந்தாவது ஆண்டைக்கடக்கு முன்பே தாயும் மறைந்தாள். நான் உரிமை கொண்டாடக்கூடியவர் உலகில் என் அண்ணன் ஒருவர் தான். அண்ணனுக்கும் எனக்கும் இடையில் மூன்றுகுழந்தைகள் பிறந்துமடிந்தன. ஆதலால் தாய் என்னிடம் அதிகமான அன்பைக் காட்டிவந்தாள்.

அந்த இன்ப வாழ்க்கையும் நீடித்திருக்கவில்லை.

தாயார் இறந்தபோது நான் அழுதுகொண்டிருந்தேன். அண்ணன் என்னை மடியின் மேல் உட்கார வைத்துக்கொண்டு என்னென்னவோ சொல்லி ஆறுதலூட்டினார். அவருடைய உள்ளம் உடைந்து, அல்ல! சிதறியே போய்விட்டது.

நாட்கள் செல்லச்செல்ல நானும் வளர்ந்து வந்தேன். என் அண்ணனது மனைவியும் என்னை அன்புடன் காத்து வந்தாள். ஆனால் அண்ணனே உயிரைக் காட்டிலும் என்னை உயர்வாக என்னை நேசித்தார். அவர் வழக்கறிஞர் தொழிலில் சிறந்து விளங்கினார். பல பணியாட்கள் இருந்த போதிலும் எனக்குச் செய்யவேண்டிய பணிகளைத் தம்கைகளாலேயே செய்த வந்தார். நான் பன்னிரண்டு வயதினனாகியும் என்னைப்படுக்கவைத்து முதுகில் தட்டிக்கொடுத்துத் தூங்கச் செய்வார். நான் தூங்கிய பிறகுதான் தான் உறங்குவார்.

என்னைச் சிறந்த அறிஞனாக்க அவர் விரும்பினார். அதற்காகவேண்டிய எல்லா முயற்சிகளையும் செய்தார். விடிவதற்குச் சில நாழிகட்கு முன்பே விழித்துக்கொண்டு குளித்தல், ஜபம் முதலியவற்றைச் செய்து அன்னை காளியின் முன்னிலையில் அமருவார். வானிற் கதிரவன் தோன்றும் வரை அங்கேயே இருப்பார். அங்கு வீற்றிருப்பதில் அவர் உயர்ந்த இன்பத்தை உணர்ந்தார். ‘அன்னை காளியின் அருளின்றி வாழ்க்கையே கிடையாது எல்லாம் அவளாலேயே நடைபெறுகிறதென்பது’ அவருடைய உறுதியான கொள்கை. படுப்பதற்கு முன்பும் அங்கு தியானத்தில் ஆழ்ந்திருப்பார்.

குறைந்த அளவு அரை நாழி நேரமாவது நானும் அன்னையின் திருவுருவத்திற்கெதிரில் வீற்றிருப்பேன். அவர் அடிக்கடி என்னிடம் சொல்வார், ‘குழந்தாய்! மகன் அன்னையின் இருதயத்தின் ஓர் பகுதியாவான். பிரமோதா! மைந்தனிடம் அவன் அன்னைக்குச் சினமே ஏற்படாது. எவ்வளவு கொடிய செயல் புரிந்தாலும் அன்னை மகனை நேசித்தே தீருவாள்’ என்று அன்பொழுகக் கூறுவார். நாட்கள் கழியவே நானும் அன்னை துர்க்கா தேவியின் அன்பனானேன். நாட்கள் செல்வதை யார் தடுக்கமுடியும்? நான் பதினாறாம் ஆண்டையும் கடந்தேன்.

உலக வாழ்க்கை விந்தை நிறைந்தது. அனிலா! மலர்களிருக்குமிடத்தில் முட்கள் இருப்பதும் உண்டல்லவா! நான் உடற்செழிப்பிலும் கல்வியறிவிலும் மேன்மை பெற்றேன். அண்ணன் மகிழ்ச்சியும் எல்லையைக் கடந்தது. ஆனால்! ஏனோ அண்ணி மட்டும் என் மேற் சிறிது சினத்துடனே நடந்து கொள்ளத் தொடங்கினாள்.

நான் வெளியில் அதிகமாகத் தங்கமாட்டேன். ஆனால் சிறிது நேரமானாலும் கடுகடுத்துப் பேசுவாள். செல்வப் பெருக்கினால் அவள் மூளை குழம்பியிருக்கக் கூடும். பொறுக்கமுடியாத சொற்களால் என்னைத் திட்டத் தொடங்கினாள். நான் எதையும் அண்ணனிடம் சொல்லாது இருந்துவிட்டேன். ஆனால் அண்ணி மட்டும் ஏதாவது முகாந்தரத்தைக் கொண்டு அண்ணனிடம் என்னைப்பற்றிக் குற்றச்சாட்டுகளைச் செய்து வந்தாள். அண்ணனே என்னிடம் அதைப் பற்றிப் பேசாதிருந்தார்.

அணணியின் உள்ளம் மிகவும் மாறிவிட்டது என்னைப் பிரித்து விடுமாறு அண்ணனிடம் பல முறைகள் கூறிவிட்டாள் நிலைமை மிகவும் சீர்குலைந்து போனதை உணர்ந்த அண்ணன் மிகவும் கலங்கிப் போனார். அவர் முகத்தைத் தாழ்த்திய வாறே பல முறைகளில் அண்ணியைத்திருத்த முயன்றார். பயனேதவும் ஏற்படவில்லை. சில நாட்கள் வீட்டைவிட்டு வெளியேறிவிட்டார்.

எனக்கு அந்த நிகழ்ச்சி உள்ளத்தில் நன்கு பதிந்து விட்டது. மூன்று நாட்கள் வீட்டிற்குள்ளேயே நுழையாது இருந்தார். அந்த மூன்று நாட்களிலும் அண்ணனுடைய வாயில் நீர்த்திவலை கூடச் செல்லவில்லை. தன் தொழிலை அவர் எங்ஙனம் கவனித்

திருக்கக் கூடும்? நான்காவது நாளில் அவர் வீட்டிற்குள் நுழைந்தார். அவர் என்னை அழைத்தார். நான் அங்கு செல்வதற்கு முன்பே என் அண்ணி அங்கு நின்று கொண்டிருந்தாள். அண்ணனுடைய கவலை நிறைந்த முகத்தைக் கண்டதும் என் கண்களில் நீர் பெருகத் தொடங்கிற்று. நான் பேசாது நின்றேன். அண்ணனுடைய கையில் இரு காகிதங்கள் இருந்தன.

மிகவும் முயற்சியுடன் அவர் பேசத் தொடங்கினார். 'தம்பீ! உன் அண்ணி உன்னைப் பிரித்துவிடத் தீர்மானம் செய்து விட்டாள். எனக்கும் அதை ஏற்கவேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. இரு காகிதங்களில் என் எண்ணப்படித் தீர்மானங்களை எழுதியிருக்கிறேன். அரசாங்கப் பதிவு சாலையில் பதிவும் செய்யப் போகிறேன். அவரவர் விரும்பியதை ஏற்கலாம். உன் அண்ணி உன்னைவிடப் பெரியவளாதலால் அவளுக்கு முதலில் தேர்ந்தெடுக்கும் உரிமையை அளித்து விட்டேன். ஓர் காகிதத்தில் என்னுடைய செல்வம் முழுதும் இருக்கிறது. மற்றொன்றில் வெற்றுடலுடன் கூடிய நான் இருக்கிறேன். விரும்பிய விதம் தேர்ந்தெடுக்கலாம்' என்று சொன்னார்.

நான் குற்றவாளியைப் போல் நடுங்கிக் கொண்டு நின்றேன். 'எனக்குச் செல்வம் தான் வேண்டும்' என்று அண்ணி சிறிது ஆராய்ந்த பின்பு கூறிவிட்டாள். நான் அண்ணனுடைய கால்களில் விழுந்தேன். அவர் என்னைத் தூக்கி மார்புடன் தழுவிக் கொண்டார்.

காகிதத்தில் கையெழுத்திட்டுப் பதிவு செய்தபின் இடுப்பாடையுடனும் மேலங்கியுடனும் என்னையும் கையில் பிடித்துக் கொண்டு அண்ணன் வெளியில் வந்து விட்டார். கல்கத்தாவில் ஒரு இல்லத்தையும் வாடகைக்குப்பேசி அதில் வாழ்ந்து வந்தோம். அண்ணன் தொழில் நன்கு நடைபெற்றது. இரண்டு மூன்று மாதங்களில் எல்லாப் பொருள்களையும் வாங்கிக் கொண்டோம். இல்லாமை என்பதையே உணராதிருந்தோம். என் அண்ணனுக்கு நான் உயர்ந்த அறிஞனாகவும, நன்னடத்தையுடையவனாகவும், அன்னை காளியிடம் அன்பு கொண்டவனாகவும் திகழ வேண்டும் என்ற ஒரே கவலைதான் இருந்தது. இந்தக் குறிக்கோள் நிறைவேறுவதற்கு அவர் செய்த முயற்சிகள் எண்ணில் அடங்காதவை. இன்று நான் அன்னை துர்க்கா தேவியின் எதிரில் சிறிது நேரமாவது உட்காருவதும், அன்னையிடம் நான் கொண்ட தூய்மையன்பும், அன்னையின் அருள் நிறைந்த பார்வை என் மேல் பொழிவதும், என் அண்ணனுடைய விடா முயற்சிகளால் ஏற்பட்டவை யென்றால் அது மிகையாகாது.

பிரமோத பாபுவின் கண்கள் நீரைப் பெருக்கிவிட்டன சிறிது நேரம் பேசாது அவர் இருந்துவிட்டார். அனிலனும் முழு கவனத்துடன் அவர் பேச்சைக்கேட்டு வந்தான்.

பிரமோத பாபு மேலும் சொல்லத்தொடங்கினார். ஓராண்டு பத்து மாதங்களும் கழிந்தன. ஒரு நாள் என் அண்ணி என்னுடன் வீற்றிருந்த என் அண்ணன் கால்களில் விழுந்தாள். கால்களைப் பிடித்து விக்கி விக்கி அழத் தொடங்கினாள்.

'எல்லாச் செல்வங்களையும் இழந்தேன். நான் கதியற்று நிற்கிறேன். என்னைத் தாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். நான் செய்த குற்றம் மன்னிக்க முடியாததென்பதை இப்போது அறிந்துள்ளேன். ஆயினும் என்னைக் காக்கவேண்டும். எனக்குத் தாமும் வேண்டும். தம் தம்பியும் வேண்டும். அறியாமல் தம் தம்பியை வெறுத்தேன்' என்று சொல்லிக் கொண்டே அண்ணி என்னைத் தன் மடியில் உட்காரச் செய்தாள்.

அண்ணன் ஒழுங்கினுடையவும் நேர்மையினுடையவும் தோரணமாக இருந்தார். பெருந்தன்மை அவரிடம் நிரம்பியிருந்தது. எவர் வருந்துவதையும் அவருக்குப் பார்க்க முடியாது. அண்ணி தக்க பிராயச்சித்தம் செய்து விட்டாளென்று அறிந்து கொண்ட அண்ணன் அவளையும் உடனே அன்புடன் ஏற்றுக்கொண்டார். நாங்கள் மூவரும் இன்பமாக வாழ்ந்து வந்தோம்.

இது அவருடைய வாழ்க்கையின் பல சம்பவங்களுள் ஒன்றாகும். அவருடைய வாழ்க்கை தியாகம், தவம், பிறருக்கு உதவுதல் இவற்றிலேயே கழிந்தது. அவர் மனித உடல் வாய்ந்த தேவதை தான் என்பது என் உறுதி அவருடைய இந்தச் சிலையுருவத்தினிடமிருந்து எனக்கு தூண்டுதல்கள் கிடைக்கின்றன.

'தம்பீ! மகன் அன்னையின் இருதயத்தின் ஒரு பகுதியாவான்' என்று அவர் கூறியதை நான் மறக்கவில்லை. மகனை விட்டுத் தாய் தனித்திருக்க விரும்பமாட்டாள். மகன் அன்னையின் அருகிலிருப்பது முறையல்லவா? ஆகவே அன்னையின் அருகிலேயே என் அண்ணனுடைய சிலையையும் அமைத்து இரு தேவதைகளையும் பூஜித்து வருகிறேன்'.

என்று சொல்லி முடித்த பிரபோத பாபு வெகு நேரம் ஆழ்ந்த தியானத்தில் ஈராக் கலந்து போனார். மதி தேவன் வானின் மையத்தை அடைந்து உலகிலெங்கும் தன் தடையற்ற ஆட்சியை நிலை நாட்டுவதன் அறிகுறியாகத் தம் கிரணங்களை எங்கும் பரப்பினான்.

வீடு செல்வதற்காக நின்று கொண்டிருந்த அனிலன் 'பிரபோத பாபு! நீர் மிகவும் பாக்கியம் செய்தவர். தேவர்களை விடச் சிறந்த சகோதரர் உதாரணச் சகோதரர், இந்திய மண்ணிற்கேற்ற சகோதரர், உமக்குக் கிடைத்தாரல்லவா? என்று வாழ்த்தினான்'.

வேண்டுதல்

ஒருமை நிலவுமனம் வேண்டும்,—திட
  உறுதி யானபக்தி வேண்டும்;—உன்
கருணை யமுதமழை வேண்டும்;—என்
  கவலைத் துயரொழிய வேண்டும்!
காமாதிப் பேய்களெனைக் கண்டால்—கதி
  கலங்கிச் சிதைந்தோட வேண்டும்!—
  அன்பு
வாய்மை பொறை பணிவு சாந்தம்—எனும்
  பாரு தென் னுள்ளிலங்க வேண்டும்!
அறிஞர், கலைஞர், அருட் புலவர்—தூய
  அன்பர் உறவெனக்கு வேண்டும்—நாளும்
வறுமை மடமை பிடர் அச்சம்—என்
  வாழ்விற் கலவாமை வேண்டும்!

கல்வித் திரு வோங்க வேண்டும்—நிஷ்
  காமியத் தொழிலாற்ற வேண்டும்—அருட்
செல்வ வளம் பெருக வேண்டும்—வாழ்வு
  தெய்வக் கலையாக வேண்டும்!
கூரிய பேரறிவு வேண்டும்—கொடுங்
  கூற்றுக்கும் அஞ்சாமை வேண்டும்—இப்
பாரின் உயிர்களிடத் தெல்லாம்—உனைப்
  பார்த்துக் களிக்குமின்பம் வேண்டும்!
பந்தக் கட்டொழிய வேண்டும்—பசு
  பதியிற் கலக்கு நலம் வேண்டும்! என்
சிந்தை பேரின்ப வெறியில்—தமிழ்த்
  தெள்ளமுதம் பொழிய வேண்டும்!

—'பரமஹம்ஸ தாஸன்'

மதிப்புரை

Bharathi Jayanthi Souvenir (பாரதி ஜயந்தி நினைவு மலர்)

வெளியிடுவோர்: பாரதி தமிழ்ச் சங்கத்தார். பக்கம்: 74. விலை - 8 அணா. கிடைக்கும் விலாசம்: பாரதி தமிழ்ச் சங்கம் காரியதரிசி 93/A, ராஷ் பிஹாரி அவென்யூ, கல்கத்தா - 26.

1950-ம் ஆண்டு டிசம்பரில் கல்கத்தாவில் கொண்டாடப்பட்ட பாரதி ஜயந்தி விழாவின் நினைவு மலர் இது. பாரத நாட்டின் தேசிய விடுதலைக் கவியும் தமிழின் மறுமலர்ச்சிக் கவியுமாகிய பாரதியாரின் பெருமையை வற்புறுத்தியும் தமிழ் மொழிக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் தமிழ்க் கலைக்கும் தமிழ் பண்பாட்டுக்கும் பத்தாண்டு காலமாக ஆரவாரமின்றி இயன்றவாறு ஆர்வமொடு தொண்டு புரிந்தும் வரும் கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்தாரது முயற்சி பெரிதும் போற்றற்பாலதேயாம். ஆங்கில உலகத்தும் பாரதியாரின் பெருமையை நிலை நாட்டும் கருத்தொடு, இந்நினைவு மலரிற் பெரும் பகுதி ஆங்கிலக் கட்டுரைகளையும், சிறு பகுதி தமிழ்க் கட்டுரைகளையும் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. ஆங்கிலக் கட்டுரைகள் சங்க வரலாற்றையும், தமிழகத்தின் புது விழிப்பினையும், பாரதியார் தமிழை வளப்படுத்துதற்குக் கூறிய வழிகளையும், அவரது வாழ்வினின்றும் வடித்தெடுத்த உயிர்த்துடிப்புற்ற கவிதையின் மாண்பையும், அவர் காட்டிய வாழ்க்கை நெறியையும், தமிழ் இலக்கியம் ஆதிமுதல் இன்றுவரை வளர்ந்த வரலாற்றையும் கூறுகின்றன; நுண்மதியும் நூற் புலமையும் வாய்ந்த புகழ்பெற்ற அறிஞர்களாலும் கல்லூரிப் பேராசிரியர்களாலும் இவை சுவைபட வரையப்பட்டுள்ளன. தமிழ்க் கட்டுரைகள் பரந்த கல்வி கேள்விகளைப் பெற்ற தமிழ்ப் புலவர்களாலும் எழுத்தாளர்களாலும் எழுதப்பட்டுள்ளன. விழா வாழ்த்துக் கவியும், கம்பர் கவியொன்றிலுள்ள 'களியருதன' என்பதற்கு மகாமகோபாத்தியாயர் சாமிநாதய்யர் அவர்கள் கூறிய நுணுகிய பொருளும், 'கொடைமடம்' என்பதை விளக்கும் கட்டுரையும் சிறப்பாக வாசகரது அறிவிற்கு இன்பம் பயக்கும் நீர்மையனவாயுள்ளன.

நல்ல பளபளப்பான காகிதத்தில் பல அழகிய புகைப்படங்களோடு சிறந்த முறையில் அச்சிடப்பட்டுள்ள இம்மலரை 8 அணா விலைக்கே கொடுக்கச் சங்கத்தார் முன்வருவதும் அவரது பிரசார ஊக்கத்திற்கும் தன்னல மறுப்புக்கும் சான்றாகின்றது.

ஸ்ரீ சுவாமி விவேகாநந்தரின் பிறந்த நாள் 19-1-1952, சனிக்கிழமை